இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 377
சனி, 07 பெப்ரவரி , 2026 |
பக்கங்கள் 16
www.ilakku.org



# நிழலாடும் சுதந்திரமும் நிலைகுலையாத போராட்டமும்

விதுரன்



## ஈழத்தமிழரின் அரசியல் ஆவணங்களும் இலங்கை அரசின் ஏமாற்றங்களும்.!

பா.அரியநேத்திரன்

## ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக ஒலித்த குரல்

வேல்ஸில் இருந்து அருஸ்



முதலாவது நிறைவாண்டின் நினைவில்...

மொழியாக்கம்: ஆர்த்திகன்



## எப்ஸ்டீன் கோப்புகள் மற்றும் யாரும் கேட்க விரும்பாத புலனாய்வு கேள்வி

# தேசியக்கொடி இனங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தியதாக ஐங்கரநேசன் தெரிவிப்பு



இனங்களை ஒருங்கிணைப்பதற்குப் பயன்படவேண்டிய தேசியக் கொடி இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியதன் தொடக்கமாக அமைந்ததாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

"தணியும் இந்த சுதந்திர தாகம்" என்ற கருப்பொருளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியப் பேரவையின் கருத்தமர்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினை வாதத்திற்கு வழிகோலும் வகையில், தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் மாற்றியமைக்கப்பட்டன. எனவே, சமத்துவம் தொடர்பில் பேசி வருகின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேசியக்கொடியில் சமத்துவமான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே மக்களுக்கு அதனை மெய்ப்பிக்க முடியும் என்றும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடைக்கு எதிரான மனு ஒத்திவைப்பு



இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்கக் கோரி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசு 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தது. அதன் பின்னர் இந்தத் தடை இந்தியாவால் அவ்வப்போது நீடிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் பின்னர் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் தடையானது நீடிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டில், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டது. இந்த உத்தரவை இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட ஒரு நீதித்துறை தீர்ப்பாயம் பின்னர் உறுதி செய்தது.

தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்த்து, வைகோ 2013இல் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி மேன்முறையீடு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு மீண்டும் நீதிபதிகள் ஆயம் முன்பு விசாரணைக்கு வந்துள்ளது.

விசாரணையின் போது, மத்திய அரசு தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி வழக்கை ஒத்திவைக்கக் கோரினார். இதன்படி கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் ஆயம் விசாரணையை பெப்ரவரி 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

## பேருந்து நடத்துனர்களாக பெண்கள் நியமனம்!



இலங்கை போக்குவரத்து சபை (CTB) பேருந்து நடத்துனர்களாக வரலாற்றில் முதன்முறையாக பெண்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு 20 பெண்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (06) மாகும்புர போக்குவரத்து மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன ஆகியோரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நியமனம் பெற்ற பெண் நடத்துனர்களுக்கு புதிய சீருடை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

# உலகின் அணு ஆயுதக்குறைப்பு உடன்பாடு காலாவதியாகியது



உலகின் இரண்டு பெரிய அணு ஆயுதக் கிடங்குகளை மட்டுப்படுத்தும் புதிய START ஒப்பந்தம், பிப்ரவரி 5 ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக காலாவதியாகியது, மேலும் அதைப் புதுப்பிப்பது குறித்து அமெரிக்காவிடமிருந்து எந்த முறையான பதிலும் மாஸ்கோவிற்கு கிடைக்கவில்லை என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் புதன்கிழமை(4) தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பரில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பகிரங்கமாக ஒரு இடைநிறுத்த முன்மொழிவை வெளியிட்டார், அமெரிக்கா அதற்கு ஒத்து பதிலளித்தால், பிப்ரவரி 5 ஆம் திகதி காலாவதியான பிறகும் மற்றொரு வருடத்திற்கு ஒப்பந்தத்தின் ஆயுதங்கள் மீதான வரம்புகளைக் கடைப்பிடிக்க முன்வந்திருந்தார்.

"எங்கள் யோசனைகளுக்கு வேண்டுமென்றே பதிலளிக்கப்படவில்லை," "புதிய START இன் கட்சிகள் இனி எந்தவொரு கடமைகள் அல்லது சமச்சீர் அறிவிப்புகளுக்கும் கட்டுப்படவில்லை" என்று மாஸ்கோ இப்போது தெரிவித்துள்ளது.

2010 இல் கையெழுத்திடப்பட்டு 2021 இல் நீட்டிக்கப்பட்ட புதிய START ஒப்பந்தம், பயன்படுத்தப்பட்ட மூலோபாய அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துகிறது மற்றும் ரஷ்ய மற்றும் அமெரிக்க ஆயுதக் கிடங்குகளுக்கான கண்காணிப்பு வழிமுறைகளையும் கொண்டுள்ளது.

1972க்குப் பிறகு முதல் முறையாக, அணுசக்தி யுத்தத்தையும் ஆயுதப் போட்டியையும் தொடர்ச்சி: பக்கம் 12

## லிபிய முன்னாள் தலைவர் கடாபியின் மகன் சுட்டுக் கொலை



லிபிய முன்னாள் தலைவர் முஅம்மர் கடாபியின் மகன் சைஃப் அல்-இஸ்லாம் கடாபி படுகொலை செய்யப்பட்டதாக, குடும்பத்திற்கு நெருக்கமான ஒருவர் செவ்வாயன்று(3) உறுதிப்படுத்தினார்.

நான்கு பேரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார், "அவரது தோட்டத்தில் அவரை சுட்டுக் கொன்ற பிறகு, அவர்கள் விரைவாக சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டனர்" என்று குடும்ப வட்டாரம் அல் அரேபியாவிடம் தெரிவித்துள்ளது. ஊடக அறிக்கைகளின்படி, கடந்த பல ஆண்டுகளாக கடாபி லிபியாவில் தலைமறைவாக வசித்து வந்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு, லிபிய நீதிமன்றம் சைஃப் அல்-இஸ்லாமுக்கு மரண தண்டனை விதித்தது, அது அவரது தந்தையின் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த

தொடர்ச்சி: பக்கம் 12


## இனி இந்தியர்களுக்கு அமெரிக்காவில் வேலை இல்லை



அமெரிக்காவின் H-1B நுழைவு அனுமதி கட்டண உயர்த்தலை சமாளிக்க கூகிள் நிறுவனம் புதிய வழியை கண்டறிந்துள்ளது. அதாவது அமெரிக்காவுக்கு இந்திய தொழிலாளர்களை தருவிப்பதை விடுத்து அவர்களை இந்தியாவில் வைத்து பணிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. அதாவது அமெரிக்க தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கு அது முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

பெங்களூரின் வைட்ஃபீல்ட் காரிடாரில் உள்ள மூன்றுபெரிய கட்டிடங்களில் 2.4 மில்லியன்சதுர அடிஅளவில்.20,000 புதிய ஊழியர்களுக்கான தொடர்ச்சி: பக்கம் 12

## உலக மக்கள் தொகையில் பெரும் மாற்றத்தை நோக்கி ஆசியாவும், ஆபிரிக்காவும்




அடுத்த 25 ஆண்டுகளில், ஆபிரிக்காவின் மக்கள் தொகை 1 பில்லியன் மக்களால் அதிகரிக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அதிகரிப்பு ஆசியாவிலும் நிகழும், அது 2100 ஆம் ஆண்டு ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களின் மக்கள் தொகையை 8 பில்லியனாக உயர்த்தும் என ஐக்கிய நாடுகள் சபையின் தகவல் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

75 ஆண்டுகளுக்குப் முன்பு ஆபிரிக்காவில் ஏறத்தாள 230 மில்லியன் மக்கள் இருந்தனர். ஆனால் அந்த மக்கள் தொடர்ச்சி: பக்கம் 15

# திருமலை தியாகி நடராசனை மறந்த ஈழத்தமிழினம்..!

பா.அரியநேத்திரன்



தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் முதல் களப்பலியான திருகோணமலை மண் ஈன்ற 22 அகவை கொண்ட இளைஞன் தியாகி தீரன் நடராசன். திருகோணமலை கந்தளாய் தமிழ் ஊரில் 1934 ம் ஆண்டு பிறந்த தமிழ் உணர்வாளன் நடராராஜன்.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை 1949 டிசம்பர் 18ல் தந்தை செல்வா ஆரம்பித்த பின்னர், 1951 ஏப்ரல் 13,14,15, ஆகிய மூன்று தினங்கள் திருகோணமலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு தந்தை செல்வா தலைமையில் இடம்பெற்றது. அந்த மாநாட்டில் ஈழத்தமிழர்களின் தலைநகராக திருகோணமலை பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரையில் ஈழத்தமிழர்களின் தலைநகரமாக பேசப்படுகிறது.

1956 பெப்ரவரி 08 ம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியில் அப்போதைய பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்காவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிச்சிங்கள சட்டமானது தமிழ் மொழி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டது. அன்றைய நாள் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியினர் தந்தை செல்வா தலைமையில் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த போராட்டமே தமிழரசுக் கட்சியின் முதலாவது அறவழிப் போராட்டம்.



1957 ஜனவரி 19 ல் தமிழரசுக்கட்சியால் சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு சட்டமறுப்பியக்கம் எனும்பெயரில் எதிர்ப்பு இயக்கம் தொடங்கி யாழ்ப்பாணம், திருகோணமலை,வவுனியா, மன்னார்,மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 'ஸ்ரீ' எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்ந்தன.

இதன் தொடர்ச்சியாக இலங்கையின் 09 வது சுதந்திர தினமான 1957 பெப்ரவரி 04 ல் தமிழர்களுக்கான கரி நாளாகவும், கறுப்பு கொடி கட்டி எதிர்ப்பு காட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அறிவித்தல் வழங்கியது.

திருகோணமலை நகரில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்தில் கட்டப்பட்டிருந்த ஸ்ரீலங்கா தேசியகொடியை அகற்றி அதே இடத்தில் கறுப்பு கொடியினை தியாகி திருமலை நடராஜன் அந்த மணிக்கூட்டு கோபுர உச்சியில் கட்டி விட்டு இறங்கி வரும்போது எவ். ஜி.மனுவல் மற்றும் டீ. சில்வா என்ற இரண்டு காவல்துறையினர் தியாகி நடராஜன் மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். மணிக்கூட்டு போபுரத்தடியில் தமிழ் தேசப்பற்று நிரம்பிய "தியாகி நடராஜன்"வீரச்சாவை தழுவினார்.

தொடர்ச்சி: பக்கம் 06

# சிங்கள மக்கள் பிள்ளையானுக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாக இருக்க வேண்டும்!





விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர பிள்ளையான் இராணுவத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார் என சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதே நேரம் சிங்கள மக்கள் பிள்ளையானுக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாக செயற்பட வேண்டும் என்றும் விடுதலை புலிகள் ஆதரவாளர்களை மகிழ்விக்கவே பிள்ளையான் சிறைப் படுத்தப்பட்டுள்ளார்.அவரை விடுவிக்க போராடுவேன் எனவும் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் தலையங்கம் | 07 பெப்ரவரி, 2026

## இன்றைய உலகில் இனவொற்றுமை, இனமானம், இனவிடுதலை அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் இறைமையை பாதுகாக்க அமைத்த மந்திரங்கள்

இன்றைய உலகில் தனியாளை அல்லது அவர் சார்ந்த அமைப்பை பெரிதாக்க மக்கள் முயல்கின்ற நேரம் எல்லாம் மக்கள் தங்கள் மக்கள் இறைமையை இழத்தல் என்பது சமகால அரசியல் வரலாறாக உள்ளது. அமெரிக்காவை மீண்டும் பெரிதாக்குதல் என்ற கோசத்துடன் அமெரிக்க மக்களால் இரண்டாவது முறையாகப் பதவிக்கு வந்த இன்றைய அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் நடைமுறையில் "சீனாவையே டொனால்ட் ட்ரம்ப் பெரிதாக்குகிறார்" எனப் பிரித்தானியாவின் "த கார்டியன்" 05.02.2026ம் ஆண்டின் ஆங்கில நாளிதழில், 'ஸ்ரீவன் கிறீன்ஹவுஸ்' அவர்கள் எழுதிய கட்டுரை எவ்வாறு " அரசத்தலைவரின் கொள்கைகள் அமெரிக்காவின் போட்டியிடும் நிலையைப் பலவீனப்படுத்தி அமெரிக்காவின் கூட்டணியினராலும் கூட சீனாவின் முன்னேற்றங்களில் எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்த இயலாத நிலையை நடைமுறையாக்கி உள்ளது என்பதை சான்றாதாரங்களுடன் எடுத்து விளக்கியது.

அமெரிக்க அரசத்தலைவரின் தன்னை மேம்படுத்துவது தவிர்ந்த எந்த அமெரிக்கா முதல் என்ற வகையிலான செயற்பாடுகளும் அமெரிக்காவை மேம்படுத்துமா? என்ற கேள்வியை எழுப்பிய ஸ்ரீவன் கிறீன்ஹவுஸ் அமெரிக்க மக்களுக்கு ட்ரம்பின் எந்த நழுவல்தன்மையுடன் கூடிய படைத்துறை நடவடிக்கைகளும் சூழ்ச்சிகளும் எதாவது ஒரு தேசத்தை பெரிதாக்குகிறதென்றால் அது அமெரிக்காவல்ல சீனாவே என அவ்வாய்வில் தெளிவாக விளக்கியுள்ளார்.

21 நாடுகளில் 26000 மக்களிடை மேற்கொள்ளப்பட்ட அளவைகள் அமெரிக்கக் கொள்கைகள் சீனாவைப் பெரிதாக்கியதுமல்லாமல் அமெரிக்காவின் கூட்டணியினரையும் கூட அமெரிக்காவில் இருந்து வெகுதூரம் தள்ளிப்போக வைத்துள்ளதை ஐரோப்பிய வெளிவிவகாரத் தொடர்புப் பிரிவுக்குத் தெளிவாக்கியுள்ளது. இது குறித்து ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திமோத்தி கார்டுன் அஸ் அவர்கள் ட்ரம்ப் அரசியலில் சீனாவைப் மீண்டும் பெரிதாக்க வேண்டுமென்று எதனையும் செய்யவில்லை ஆனால் இந்தப் புள்ளிவிபரங்கள் அவ்வாறு உலகம் பார்க்கிறது என்பதை உறுதி செய்துள்ளன என்று கூறியுள்ளார்.

பியூ ஆய்வு மையம் (Pew Research Centert) 23 நாடுகளில் நடத்திய ஆய்வின் படி அமெரிக்கா உலகின் முன்னணி சக்தி என்பதை விட சீனா உலகின் உச்ச பொருளாதாரச் சக்தி என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ட்ரம்பின் அமெரிக்கா முதல் என்ற நுகர்வோரை ஈர்க்கும் ஆரவார மொழிகளுக்கு மத்தியில் சீனா எழுச்சியுற்று அமெரிக்கா வீழ்ச்சியடைந்துள்ளது. ட்ரம்ப் கோபமடைந்து அமெரிக்காவின் நெருங்கிய கூட்டணியாக இருந்த கனடாவின் மேல் உயர் வரியினை விதித்ததுமல்லாமல் கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்றப்போவதாக விடுத்த அறிவிப்பு கனடாவை சீனாவை மூலோபாய கூட்டாண்மையாக மாற்றவைத்துள்ளமை உலகில் புதிய அரசியல் எதார்த்தத்தை உலகம் பின்பற்றுவதைத் தொடக்கி வைத்துவிட்டது. ட்ரம்பின் அரசியல் மொழியில் இதனையே அவர் விருந்தோம்பல் எனப் பலநாடுகளையும் அழைத்து வெள்ளை மாளிகையில் உபசரிக்கையில் கூறினார். இப்பொழுது எல்லா நாடுகளும் இந்த உபசரிப்புத் தந்திரோபாயத்தில் தம்மை நிலைப்படுத்திக் கொள்கின்றன.

தென்கொரியா சீனாவுக்குச் சென்று பன்னிரெண்டுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை தொழில்நுட்பத்திலும் வர்த்தகத்திலும் செய்தது. பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்டாமர் எட்டு ஆண்டுகளின் பின்னர் சீனாவுக்குச் சென்று பிரித்தானியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இறுக்கமடைந்து வந்த உறைபனி நிலையை உடைத்தெறிந்து ஒரு மாதத்துக்கு விசா இல்லாமலே சீன – பிரித்தானிய மக்கள் இருநாடுகளுக்கும் பயணிப்பதான உரிமையுடன் கூடவே அணுவாயுதங்களை யுத்தம் நடக்கும் களங்களில் சேமித்து வைத்திருக்கக் கூடாதென்ற உலகப் பாதுகாப்புக்கான உலக உடன்படிக்கையையும் நினைவுபடுத்தி அணுவாயுத அழிவில் இருந்து உலகைக் காப்பதற்கான உத்தியையும் முன்னெடுத்தார். யேர்மனின் சான்சிலர் பிரெரிக் மேர்சூம் பெப்ரவரி மாதக் கடைசியில் சீனாவுக்கு உத்தியோக பூர்வமாகச் செல்லவுள்ளார். கனடாப் பிரதமர் மார்க் கானியின் மொழியில் கூறுவதானால் ட்ரம்ப் உலகின் ஒழுங்கை உடைத்து விட்டார்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் (Union) ஐரோப்பிய கூட்டமைவாக (Federation) மாற வேண்டுமென்னும் கோரிக்கை தோன்றியுள்ளது. பிரிக்ஸிட்டால் விலகிய பிரித்தானியாவையும் உள்ளடக்கிய விருப்புள்ளவர்களின் ஐரோப்பியக் கூட்டணிக்கான வேண்டுகோள் உருவாகியுள்ளது. உக்ரேன் - ரஸ்ய – அமெரிக்கா இடையில் தொடங்கி நடைபெற்று வரும் பேச்சுக்களில் ஐரோப்பிய பிரதிநிதிகளினதும் இணைப்புக்கான வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. காலவதியான அமெரிக்க ரஸ்ய நியூகிளியர் வோர் கெட் உற்பத்தியை மட்டுப்படுத்தும் ஒப்பந்தம் காலவதியான நிலையில் புடின் தற்காலிகமாக ஒராண்டுக்கு அதனை நீடிக்கச் சம்மதித்து அமெரிக்காவின் செயற்பாடுகளைப் பொறுத்து அதனை தொடரலாம் என அறிவித்துள்ளமையும், சீனாவையும் இதில் இணைய அமெரிக்கா விடுத்த அழைப்பைச் சீனா இப்போதைக்கு இல்லையென எடுத்த எடுப்பிலேயே மறுத்திருப்பதும் இவ்வாரத்தில் உலகாளவிய முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்நிலையில் வெனிசுலாவில் இருந்து மார்ச் மாதத்தில் தொடங்கவுள்ள அமெரிக்க எண்ணெய் விற்பனைக்குப் பெரிய சந்தையாகவும் இந்திய ரஸ்ய ஆழமான உறவை அசைத்துப் பார்க்கும் உத்தியாகவும் இந்தியாவின் பொருட்கள் மீதான அமெரிக்காவின் 50 வீத வரிவிதிப்பை 18 வீதமாகக் ட்ரம்ப் குறைத்துள்ள அதே நேரம் இந்தியாவில் அமெரிக்கப் பொருட்களின் இறக்குமதிக்கு வரியில்லை என்கிற உத்தரவாதத்தைத் ட்ரம்ப் பெற்றுள்ளார். இவ்வாறான சூழலில் ட்ரம்பைக் குறைகூறுவதில் காலத்தை வீணடிக்காது அமெரிக்க மக்களுக்கான நேரான பார்வை ஒன்றை முன்வைப்பதன் மூலம் அமெரிக்க மக்களின் வாழ்வை முன்னேற்றி ஏற்பட்டுள்ள சரிவை மீள் நிமிர்த்த வேண்டுமென அமெரிக்காவின வெர்மன்டின் சுயேட்சையான செனட்டராகவும் அமெரிக்க காங்கிரசின் வரலாற்றில் மிக நீண்டகால சுயேட்சை செனட்டராகவும் உள்ள பேர்னி சான்டேர்ஸ் 05.02.26ம் திகதி அன்று பிரித்தானிய த கார்டியன் ஆங்கில நாளிதழில் ஒரு அருமையான சிந்தனைக் கட்டுரையை எழுதியுள்ளார். அதில் "மக்கள் திரண்டெழுந்து சனநாயகத்தை சர்வாதிகாரத்துக்கு எதிராக நிலைப்படுத்த வேண்டும். நீதியைப் பேராசைக்கு எதிராகவும் ஒற்றுமையை பிரிவினைக்கு எதிராகவும் முன்னெடுக்க வேண்டும்.

இதனை மக்கள் அன்று உணர்ந்தனர். இன்றும் மக்கள் இதனை மீளவும் தமது உணர்வாக்க வேண்டும். மக்கள் ஒன்றுபட்டு எழுகின்ற போது எந்தப் பணத்தாலும் எந்தத் தன்னல ஆட்சியாளராலும் அதனைத் தடுக்கவியலாது மக்கள் சாதிப்பார்கள்" என்ற நம்பிக்கையை மக்களுக்கு அளித்துள்ளார். பேர்னி சான்டோர்ஸின் இந்த கருத்துக்களை ஈழத்தமிழர்களும் ஆழமாக நெஞ்சிருத்த வேண்டும் என்று இலக்கு வேண்டுகின்றது. அதே நேரத்தில் 1931 முதல் 1977 வரை ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் தனிப்பெருந்தலைவர் என்ற சிறப்புடன் தன்னை நிலைநிறுத்தி 09.02.1977 இலே காலம் ஆகி இன்றும் ஈழத்தமிழர் நெஞ்சங்களில் வாழும் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஈழத்தமிழர்கள் தங்களுடைய இறைமையைப் பாதுகாக்க அவருடைய 46 ஆண்டுகால அரசியல், சட்டம், மற்றும் வெளிவிவகார இராஜதந்திர அனுபவங்களின் அடிப்படையில் கூறிய மூன்று சொற்களாலான மந்திரம் "இனஒற்றுமை, இனத்தின் தன்மானம்,, இனத்தின் விடுதலை என்பனவற்றை ஈழத்தமிழர்கள் அவரின் 49வது ஆண்டு நினைவேந்தல் 09.02. 2026இல் வருகின்ற பொழுது நெஞ்சிருத்தி 22.05. 2026இல் அவரும் இணைந்து நின்று நிறைவேற்றிய வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50வது ஆண்டு நிறைவு வருகின்ற பொழுது ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினையை உலக மக்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கான செயலணிகளை உருவாக்கிக் கருத்தரங்குகள், மாநாடுகள், வழியாகவும் ஊடகத்துறை வழியாகவும் அரசியல் அறிவூட்டல் கல்வி அளித்தல் வழியாகவும் உச்ச முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமென இவ்வாரத்தில் இலக்கு வேண்டுகிறது.

பிரித்தானிய வெளிவிவகார அலுவலகத்தில் இருபதாண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஈ. எச் கார் அவர்கள் " ஒரு சமுதாயம் எதிர்காலத்தை நோக்கித் தன்னால் பயணிக்க இயலும் என்கின்ற பலத்தில் நம்பிக்கையை இழக்கின்ற பொழுது விரைவாகத் தன்னுடைய பழைய காலத்தின் சாதனைகளின் வழி வாழ்வதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்" என்கிற எச்சரிப்பை அவருடைய வரலாறு என்றால் என்ன? என்கின்ற ஆய்வில் தெளிவாக எடுத்துரைத்தார். இதனால் ஈழத்தமிழரின் இறைமையின் அடிப்படையிலான தாயகம் தேசியம் தன்னாட்சி குறித்த நம்பிக்கையை வளர்ப்பதன் மூலமே ஈழத்தமிழர் தேசிய நீக்கத்தை இறைமை நீக்கத்தை ஈழத்தமிழரின் தேசியம் இறைமை குறித்த சந்தேகக் கேள்விகளை எழுப்பி ஈழத்தமிழர்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்தி அவர்களை அவர்களுடைய கடந்த காலத்தின் சாதனைகளிலிருந்து வெளியே கொண்டு வர முயலுபவர்களுக்கான சரியான எதிர்வினையாகுமென்பதே இலக்கின் இவ்வாரத்து உறுதியான பதில்.

**ஆசிரியர்**

# ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக ஒலித்த குரல்

— வேல்ஸில் இருந்து **அருஸ்**

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் வெளிவந்த ஈழமுரசு பத்திரிகைளில் ஆரம்பித்து, முரசொலி, ஞாயிறு தினக்குரல் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவரும், பொருண்மியம் என்ற சஞ்சிகை, இலக்கு மின்னிதழ், இலக்கு இணையம் மற்றும் அனைத்துலக உயிரோடைத்தமிழ் வானொலி ஆகிய ஊடகங்களில் இறுதிவரையிலும் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி அவர்கள் எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு கடந்துள்ளது.

ஆனால் அவரின் இழப்பு என்பது ஈழத்தமிழ் ஊடகத்துறைக்கு இன்றும் மிகப்பெரும் இழப்பாகவே இருக்கின்றது. தமிழீழ மக்களின் விடுதலைக்காக விடு தலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் இருந்து தமிழ் மக்களின் அவலங்கள், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், விடுதலைப் போராட்டம் தொடர்பான பார்வை என மக்களுக்கான தகவல்களை ஊடகத்துறையில் சரியான முறையில் வழங்கிய பெருமையை கொண்டவர் அவர். எப்போதும் மக்களின் குரலாகவே ஒலித்த அவர் எமது இலக்கு மின்னிதழில் இறுதியாக எழுதிய கட்டுரையும் கடந்த வாரம் யாழ் குடாநாட்டை உலுக்கிய மீனவர் போராட்டம் தொடர்பானதே.



எல்லைதாண்டும் மீனவர் பிரச்சினையை இலங்கை எவ்வாறு கையாளப் போகிறது? என்ற தலைப்பில் இலக்கு வார மின்னிதழில் அவர் அகிலன் என்ற பெயரில் எழுதியிருந்தார். பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது. அதனால், சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? என்ற கேள்வியையும் அவர் தனது கட்டுரையில் எழுப்பியிருந்தார். அவரின் அன்றைய மனநிலையை தான் கடந்த வாரம் யாழில் இடம்பெற்ற போராட்டத்தில் மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

அரசியல் ஊடகத்துறை என்பது ஜனநாயக செயல்முறையின் மேற்பார்வையாளராக இருக்க வேண்டும், ஏனெனில் அவை ஜனநாயகத்தின் பிரச்சினைகளுக்கு பலிக்கடாவாக இல்லாமல் குடிமக்களின் வாழ்வியலுடன் தொடர்புடையவை.

விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற முதாலாவது வரலாற்றுச் சிறப்புமிக்க கைதிகள் பரிமாற்றத்தின் போது ஒரு ஊடகவியலாளராக அதில் பங்கெடுத்து அந்த நிகழ்வை மக்களிடம் சரியான முறையில் கொண்டு சென்று சேர்த்ததில் அன்று இளம் ஊடகவியலாளராக பணியாற்றிய பாரதி அண்ணாவின் பங்களிப்பு முக்கியமானது. எனக்கும் பாரதி அண்ணவுக்குமான தொடர்புகள் 2005 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்திருந்தது.

தமிழ்நாதம் மற்றும் புதினம் இணையத் தளங்களுக்கு கொழும்பில் இருந்து கொண்டு தனது ஊடகத்துறை அனுபவங்களையும், உதவிகளையும் அன்று வழங்கிவந்தவர் பாரதி அண்ணா. எனது ஆரம்பகால கட்டுரைகளை சரிபார்த்து தமிழ்நாதத்திற்கு பதிவேற்றம் செய்யும் பணிகளையும் அவர் பல தடவைகளில் மேற்கொண்டிருந்தார். ஆனால் அதன் பின்னர் 2018 ஆம் ஆண்டு இலக்கு இணையத்தளம் மற்றும் மின்னிதழ் என்பன ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதில் அகிலன் என்ற பெயரில் கட்டுரைகளையும், செய்திகளையும் வழங்கி வந்ததுடன், அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலிக்கும் அவரின் செய்தித் தொகுப்பும், நேர்காணல்களும் வலுச் சேர்த்திருந்தன.

முரசொலி என்னும் பத்திரிகையை நடத்திய அவரது நண்பரான திருச்செல்வம் அவர்களின் புதல்வன் அகிலன் அவர்களை 1988-89 காலப் பகுதியில் இந்திய இராணுவத்துடன் இணைந்து இயங்கிய துணை இராணுவக்குழு இந்திய படைகளின் உதவியுடன் படுகொலை செய்திருந்தது. அந்த அப்பாவி இளைஞனின் பெயரை தான் தனது புனைபெயராகக் கொண்டு இலக்கு ஊடகத்தில் கட்டுரைகளை எழுதிவந்திருந்தார்.






இலங்கையின் அரசியல் நிலவரம், தாயகத்து அரசியல் நிலவரங்களை நடுநிலமை தவறாது தருவதில் அவரின் திறமை அசாத்தியமானது. ஆழமான பார்வையுடன் களநிலமையின் யதார்த்தத்தை கொண்டுவரும் அவரின் எழுத்து ஆற்றல் கண்டு பல தடவைகள் நான் வியந்ததுண்டு. ஒவ்வொரு வருடத்தின் முடிவில் அந்த வருடத்தில் தாயகத்து அரசியலை மீளாய்வு செய்வதிலும், அடுத்த வருடத்திற்கான அரசியல் எவ்வாறு அமையும் என்பதை தனது ஊடகத்துறை மற்றும் அரசியல் அனுபவங்களின் மூலம் எதிர்வு கூறுவதிலும் அவர் மிகவும் கைதேந்தவர்.



இலங்கைக்கு 2025 எவ்வாறு அமையும்? என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில், பொருளாதார நிலைமை, பெரும்பாலும் ரணில் போட்ட பாதையில்தான் பயணிக்கும். இந்த வருடத்தில் நடைபெறப்போகும் தேர்தல்கள் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை. கடந்த வருடத்தில் இடம்பெற்ற மாற்றங்களை மேலும் பலப்படுத்துவதாகவே அமையும். மாகாண சபைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான அணியான ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்தியாவின் அழுத்தம் மற்றும், தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பின் போது, கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி அரசாங்கம் செல்ல வேண்டியிருக்கும் என அவர் கணிப்பிட்ட அனைத்தும் சரியாகவே நடந்துள்ளது.

இந்த பெரிய எழுத்து ஆற்றல் கொண்ட அந்த மனிதர் எம்முடன் பேசும்போது காட்டும் அன்பும், பொறுமையும், மிகவும் அற்புதமானது. எமது இலக்கு மின்னிதழ் குழுவின் வாரந்த கூட்டத்தில் மிகவும் பக்குவமாக தனது கருத்துக்களை முன்வைப்பதுடன், மிகவும் பொறுமையாக எமது கருத்துக்களை உள்வாங்கி தனக்குரிய பணியை மிகவும் திறப்பட செய்து முடிக்கும் அவரின் பணிவும், தன்னடக்கமும், ஆளுமையும் நாம் அவரிடம் கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று.

தமிழீழ ஊடகப்பரப்பில் ஆளுமைமிக்க, தரம்வாய்ந்த ஊடகவியலாளர்கள் என்பது மிகவும் சொற்பமானது. அதுவும் எமது போராட்டத்தின் பின்னடைவுக்கான காரணிகளில் ஒன்று. ஆனால் அவ்வாறு இருக்கும் ஊடகவியலாளர்களையும் நாம் இழந்துகொண்டிருப்பது மிகவும் வேதனையானது. அவரின் தந்தை இராஜநாயகம் மாஸ்ரரும் ஒரு எழுத்தாளர் என்பதுடன், அவரின் மாமியாரான சாவித்திரி அத்துவிதாநந்தனும் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



அமரர் சு. இராஜநாயகம் மாஸ்டர் இலங்கையின் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களில் ஒருவர். பாரதி அண்ணாவின் சகோதரர் பரதன் அவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவான நிதர்சனம் தொலைக்காட்சியில் தனது ஊடக களப்பணியை ஆற்றியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது அவரின் குடும்பத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் ஏதோ ஒருவகையில் எமது விடுதலைப்போரிலும், மக்களின் விடுதலையிலும் பங்கெடுத்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆயிரம் துப்பாக்கிகளால் முடியாத காரியத்தை சில சமயங்களில் ஒரு பேனா நிகழ்த்திவிடுவதுண்டு, அதற்கு சிறந்த அண்மைய உதாரணம் பாலஸ்தீன - இஸ்ரேல் போராகும். பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய அரசுக்கு ஏற்படுத்திய சேதத்தைவிட அல்ஜசீரா என்ற ஊடகம் இஸ்ரேலுக்கு அனைத்துலக மட்டத்தில் ஏற்படுத்தி சேதங்கள் மிகப்பெரியது. அதற்கு விலையாக அது பல ஊடகவியலாளர்களையும் இழந்துள்ளது. பாரதி அண்ணாவின் பணியும் அவ்வாறானது தான். எமது விடுதலைப் போரின் காலத்தில் அவர் சந்தித்த துன்பங்களும் ஏராளம். 1985 ஆம் ஆண்டு செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் இலங்கை இராணுவத்தினரால் சாவகச்சேரியில் வைத்து கைது செய்யப்பட்டு குருநகர் படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் வெளிவந்திருந்தார். ஈழமுரசில் பணியாற்றிய காலங்களில் யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் எறிகணைகளுக்கு மத்தியில் ஒரு சில மின்குழிழ்களின் வெளிச்சத்தில் தான் அவர் பத்திரிகையை வடிவமைப்பதுண்டு.

வடக்குக் கிழக்கு மாகாண சபை நிகழ்வு ஒன்றுக்காக இந்தியப்படையின் ஏற்பாட்டில் ஊடகர்கள் சிலர் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது மரத்துடன் பேரூந்து மோதியதால் இவரது கையில் காயம் ஏற்பட்டதுடன், ஊடகப் பணியின்போதே அவர் தனது கையையும் இழந்திருந்தது மிகவும் வருத்தமானது. எனினும் அதன் பின்னரும் அவர் தான் இறக்கும் வரையிலும் ஒரு கையுடன் தனது ஊடகப் பணியினை தொடர்ந்தே வந்திருந்தார். இன்று நாம் எமது இனத்தின் விடுதலைலைக்காக பயணித்த ஒரு தலைசிறந்த ஊடகப்போராளியை இழந்து நிற்கின்றோம். அவரின் இழப்பு என்பது ஈழத்தமிழ் மக்களுக்களுக்கு ஒரு ஊடக வெளியை மட்டும் ஏற்படுத்தவில்லை, அத்துடன் அரசியல் வெற்றிடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆரோக்கியமான ஜனநாயகத்தை நிலைநாட்ட, பெரும்பாலும் ஆபத்தானதாகவும், சவாலானதாகவும் உள்ள நிலைமைகளில் உண்மையை வெளிக்கொணர்வதற்கும், அதனை பொறுப்பேற்க வைப்பதற்கும், ஊடகத்திற்கு உள்ள முக்கிய பங்கை, நிலைநாட்ட அவர் மேற்கொண்ட அர்ப்பணிப்பு என்றென்றும் மக்களின் மனங்களில் நிலைத்திருக்கும்.

• • •

# நிழலாடும் சுதந்திரமும் நிலைகுலையாத போராட்டமும்



விதுரன்

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம், கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் 'இலங்கையைக் கட்டியெழுப்புவோம்' என்ற மகுடத்தின் கீழ் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, புதிய அரசியல் கலாசாரத்தின் தொடக்கமாகவும், பொருளாதார மலர்ச்சியின் அடையாளமாகவும் தென்னிலங்கையில் பார்க்கப்பட்டது. ஆனால், அதேவேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கறுப்புக் கொடிகளாலும், நீதிக்கான கோஷங்களாலும் 'கரிநாளாக' உருமாறியிருந்தன.

ஜனாதிபதியின் உரையில் தென்பட்ட சமரசப் போக்குகளும், தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் குறித்த மௌனமும் மீண்டும் ஒருமுறை ஏமாற்றத்தையே பரிசாகத் தந்துள்ளன.



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது சுதந்திர தின உரையில், 'இனவாதம்' மற்றும் 'தீவிரவாதம்' ஆகியவற்றை நாட்டின் பலத்தை அழிக்கும் ஆயுதங்கள் என்று சாடினார்.

மொழி, மதம் மற்றும் கலாசார வேறுபாடுகளைக் கடந்து 'இலங்கையர்' என்ற ஒற்றை அடையாளத்தின் கீழ் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்.

குறிப்பாக, கடந்த காலங்களில் தனது தரப்பினராலேயே விமர்சிக்கப்பட்ட '75 ஆண்டு கால சாபம்' என்ற கருத்தை அவர் பகிரங்கமாக நிராகரித்தார். கடந்த 78 ஆண்டுகளில் நிகழ்ந்த நல்ல விடயங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அவரது கூற்று, ஒரு முற்போக்கான தலைவராகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் முயற்சியாகவே அமைந்தது.

இருப்பினும், அந்த உரையில் தமிழ் மக்களின் அடிநாதமான அரசியல் அபிலாஷைகள் குறித்து எந்தவொரு தெளிவான கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை.

133 ஆண்டுகால காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, கடந்த மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அதிகாரப் பகிர்வு அல்லது இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு பற்றி நேரடியான வாக்குறுதிகள் எதையும் வழங்கவில்லை.

'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற பொதுவான கூற்று, கட்டமைப்பு ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எவ்வித நம்பிக்கையையும் அளிக்கவில்லை.



அநுரவின் உரையானது தமிழ் மக்களின் ஆழ் மனதில் தேங்கிக்கிடக்கும் வலிகளைத் துடைப்பதற்குப் பதிலாக, அவற்றை முற்றாக நிராகரிக்குமொரு போக்கையே வெளிப்படுத்தியது.

'இலங்கையர்' என்ற ஒற்றை அடையாளத்தைப் பற்றிப் பேசும் ஜனாதிபதி, அந்த அடையாளத்திற்குள் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இன அடையாளமும் தன்னாட்சி உரிமையும் எவ்வாறு அங்கீகரிக்கப்படும் என்பதைத் திட்டமிட்டுத் தவிர்த்துவிட்டார்.



இதுவொரு புதிய இலங்கையைப் பற்றிய கனவல்ல, மாறாகப் பழைய ஒற்றையாட்சிச் சிந்தனையின் நவீன வடிவமே என்பதை அவரது மௌனம் பறைசாற்றுகிறது.

கடந்த காலக்கொடுமைகளுக்குப் பரிகார நீதி வழங்காமல், 'ஒன்றாகச் செல்வோம்' என்று அழைப்பதானது பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களில் உப்பினைத் தடவுவதற்கு ஒப்பானது.

ஜனாதிபதியின் சொல்லாடல்களில் தென்படும் 'நல்லிணக்கம்' என்பது அதிகாரப்பகிர்வை உள்ளடக்கியதாக இல்லாமல், வெறும் பொருளாதார மேம்பாட்டோடு சுருங்கிவிட்டது தமிழ் மக்களிடையே ஆழமான விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய மையவாத உரை ஒருபுறமிருக்க, வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து சுதந்திர தினத்தைப் புறக்கணித்துக் கறுப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தினர்.




இவர்களின் 10 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய பிரகடனம், வெறும் உணர்ச்சிக் கோஷங்கள் அல்ல. அவை ஏழு தசாப்த கால அடக்குமுறையின் விளைவால் எழுந்த நீதிக்கான ஆவணமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை முடிவுக்குக் கொண்டு வருதல், தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதை நிறுத்துதல் போன்ற கோரிக்கைகள் அநுரவின் ஆட்சியில் மாற்றம் காணும் என்று எதிர்பார்த்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கிறது.

குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உண்மை வெளிப்பட வேண்டும் என்பதும், சர்வதேச மேற்பார்வையில் மனித புதைகுழிகள் அகழப்பட வேண்டும் என்பதும் இந்தப் பிரகடனத்தின் உணர்வுரீதியான நியாயமான கோரிக்கைகளாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போராட்டக்காரர்களின் அழுத்தம், உள்நாட்டுப் பொறிமுறைகள் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையீனத்தையே மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

'சுதந்திரம் எங்களுக்குக் கிடைக்கும் நாள், எங்கள் குழந்தைகளின் உண்மை வெளிவரும் நாளே' என்று வவுனியாவில் போராடும் தாய்மார்கள் வெளிப்படுத்திய ஆதங்கம், 78 ஆண்டுகால சுதந்திரம் தமிழ் மக்களுக்கு வெறும் காகித

தொடர்ச்சி: பக்கம் 14

# சுதந்திர தினம் அது வாசகம் அல்ல எங்களுக்கு சுவாசம்




இலங்கையில் தமிழருக்கான மரபுவழி உரிமைகள் மறுக்கப்பட்டு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னரான பகுதியில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகளால் தமிழருக்கான உரிமைகள் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டவாறே வந்துள்ளன. அந்த வகையில் இன்று வரை எமக்கான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்த வண்ணமே இருக்கின்றன.



தற்போதைய புதிய அரசாங்கமும் எமக்கான நீதியை பெற்றுத் தருவதில் உடன்பாடற்ற நிலையையே கொண்டிருப்பதாகத் தெரிகிறது. காணாமல் ஆக்கப் பட்டோருக்கான நீதி நிலுவையில் காலம் கடந்தும் இருக்கிறது. அதுமட்டுமின்றி வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர், வெள்ளைக் கொடியோடு இறுதிப் போரில் சரணடைந்தோர் என அவர்களுக்கான எந்த நீதியும் இதுவரைக் கிடைக்கப் பெறவில்லை.

தொடரும் தமிழ் மக்களின் நில அபகரிப்பு, சட்டவிரோதக் குடியிருப்பு மற்றும் தமிழர் பகுதிகளில் புதிய விகாரைகள் உருவாக்குதல், எங்கள் வரலாற்று சுவடுகள் அழிக்கப்படல், கலாசார மடைமாற்று என்பன மேலும் மேலும் எங்களைப் பின்தள்ளி எங்கள் தனித்துவமான வாழ்வியலை அழிக்கும் நிகழ்வாகவே இன்றுவரை நகர்கிறது.

ஒரு பக்கம் அரசியல் கலந்த மாய வார்த்தைகள்.. மறுபக்கம் மெல்ல மெல்ல எமக்கான வளச் சுரண்டல்கள் என நாம் சொந்த மண்ணில் புறக்கணிக்கப் பட்ட இனமாகவே நடாத்தப்படுகிறோம்.

இந் நிலையில் எவ்வாறு நாங்கள் சுதந்திர தினத்தை உணர்வோடு கொண்டாட முடியும்? எங்கள் வளங்களும் நிலங்களும் அந்நிய தேசத்திற்கு விற்கப் படுகின்றன. நீண்ட குத்தகைக்கு கையளிக்கப் படுகின்றன. ஆனால் எங்களுக்குத் தருவதற்கோ , அதை நாங்கள் பயன் படுத்துவதற்கோ ஆளும் பேரினவாதம் ஒருபோதும் விரும்ப வில்லை.




எப்படி இம் மண்ணில் சிங்கள மக்களுக்கு உரிமை இருக்கிறதோ அதே போல் எங்களுக்கும் சகல உரிமைகளும் இம் மண்ணில் இருக்கின்றது. நாம் பிரித்தானிய ஆட்சிக்கு முன்னரான மரபுவழிவந்த ஆதிக் குடிகளாவோம்.

இங்கு இனவாதமற்ற ஒரு அரசே தற்போது இருக்கிறது என்று அரசாங்கம் வெற்று வார்த்தைகளால் சொல்கிறது. ஆனால் அது வெறும் வர்ணம் பூசப்பட்ட வார்த்தைகளாகவே இருக்கிறன. செயற்பாட்டிலோ அல் லது நடை முறையிலோ அவ்வாறு இல்லை என்பதே உண்மை நிலையாகும்.

தற்போது கூட அரசாங்கம் ஒரு விடயத்தை கூறி இருக்கிறது." இறுதிப் போரில் எந்தவொரு தமிழ் பெண்க ளும் வன்புணர்வுக்கு ஆளாகவில்லை" இது எத்தகைய பொய்யான கூற்று என்பதை நாம் அறிவோம். இவ்வாறே எங்களுக்காக பலதரப்பட்ட நீதிகள் மறுக்கப்பட்ட இந் தேசத்தில், உரிமைகள் நிராகரிக்கப்பட்ட இத்தேசத்தில் எவ்வாறு நாங்கள் சுதந்திர தினத்தை முழுமனதோடு கொண்டாட முடியும்.

ஒரு இருண்ட தேசத்தில் எங்களுக்கான உரிமை எனும் வெளிச்சத்தை தேடிக் கொண்டே இருக்கும் இனப் பரம்பல்கள் நாங்கள்.

என்று எங்களுக்கான நீதி நியாயம் நிலைநாட்டப் படுகிறதோஎங்களுக்கானவிடுதலைதேசம்உருவாகிறதோ அன்று இத்தனை காலமும் எங்கள் மண்ணுக்காய் உயிர் நீத்த உறவுகளின் ஆத்ம ஆசிர்வாதத்தோடு சுதந்திர தினத்தை நாங்கள் கொண்டாடுவோம். அதுவரை இந் நாள் எமக்கு கரிநாளாகவே கருத்தில் கொள்ளப் படும்.

"சுதந்திரம் என்பது வெறும் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வாசகமல்ல அது எங்கள் சுவாசம் ".

தொகுப்பு:- **தாயகம் கலா பாரதீகரன்**

## திருமலை தியாகி ... தொடர்ச்சி...

அதே நேரம் அங்கு கூடி நின்றவர்கள் மீதும் காவல்துறையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப் பாக்கி சூட்டில் ஆறுபேர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். 12 வயது மாணவன் எஸ். மயில்வாகனம்,22 வயது இளைஞன் வீ.நடராசா,கே.வேண் தரன்,20 வயது மாணவன் என்.கந்தசாமி . 28 வயது இளைஞன் எஷ். சிவப்பிரகாசம்,மீன் வியாபாரம் செய்த அருமைத்துரை ஆகியோர் இவ்வாறு படுகாயமடைந்தனர்.

மறுநாள்1957 பெப்ரவரி 05 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02 மணியளவில் சாவடைந்த தியாகி நடராஜனின் இறுதி ஊர்வலம் திருகோணமலையில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் புடை சூழ சுமார் ஒரு மைல் நீளத்திற்கு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தெரு நெடுகிலும் பெண்கள் கூடி நின்று கண்ணீர் வடித்தனர்.

தியாகி நடராஜனின் புகழ் உடல் தாங்கிய பிரேதப் பெட்டியை திருமலை நகரசபைத் தலைவர் திரு. த. ஏகாம்பரம், திருகோணமலை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இராஜவரோதயம், யாழ்ப்பாணம் தீவகத் தொகுதி தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வி.ஏ. கந்தையா, மற்றும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான எம். தாமோதரம்பிள்ளை, சட்டத்தரணி துரைநாயகம், கப்டன், ஏ.ஸி.கனகசிங்கம் ஆகியோர் கையேந்தித் தூக்கிச் சென்று ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தனர்.

புகழுடல் ஊர்வல ஏற்பாடுகளை எல்லாம் தமிழரசுக் கட்சி பிரமுகர் எம். இராமநாதன் கவனித்துக் கொண்டார். 50 மலர்வளையங்களை தாங்கி இளைஞர்கள் சென்றனர்.

கந்தளாய் சேமக்காலையில் தியாகி திருமலை நடராஜன் அவர்களது புகழ் உடல் விதைக்கப்பட்டது (நல்ல டக்கம் செய்யப்பட்டது.) அந்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த தூபி கட்டி "தமிழ் மொழியை காக்க உயிர்நீத்த தியாகி நடராஜன்" என்று பொறிக்க வேண்டும் என எல்லோராலும் அபிப்பிராய பட்டதனாலேயே நடராஜன் அவர்களது உடலம் தகனம் செய்யப்படாமல் அடக்கம் செய்ப்பபட்டதாக அப்போது கூறப்பட்டது. (ஆதாரம்-1957 பெப்ரவரி 10 -சுதந்தி ரன் பத்திரிகை)

தியாகி நடராஜனின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட கந்தளாய் ஊரில் 1957, ல் தமிழ் மக்கள் செறிந்து பெரும்பான்மையாக அதிகளவில் அப்போது வாழ்ந்தனர். ஆனால் கந்தளாயில் இன்றைய (2026)நிலைமை தமிழர்கள் மூன்றாம் நிலையில் உள்ளனர். தற்போது சிங்களவர்கள் 40467, பேர்,முஸ்லிம்கள் 8746 பேர் - தமிழர்கள் 1748 பேர் மட்டுமே வாழ்கின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்து சரியாக ஒன்பதாவது ஆண்டில் விடுதலை உணர்வுடன் காவல்துறையினரின் துப்பாக்கி சூட்டில் முதல் பலியான திருகோணமலை மண் தந்த வீரப்புதல்வன் தியாகி நடராஜன் அவர்களை கடந்த 2026 பெப்ரவரி 04 ல் இலங்கை சுதந்திரம் அடைந்து 78 வது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளதாக கூறும் அதேவேளை, இந்த நாள் தியாகி நடராஜனின் 69 வது ஆண்டு நினைவு நாள் என்பதையும் ஒவ்வொரு உணர்வுள்ள தமிழரும் ஒருகணம் நினைத்து அவருக்கான நினைவு வணக்கத்தை செய்ய வேண்டும்.

தமிழர் தாயகம்.அவரின் தியாகத்தை மதிக்க வேண்டும், வரலாறுகளை மாணவர்களுக்கும் இளைஞர் களுக்கும் இவ்வாறு நினைவு கூரும்போதுதான் அவர்களால் அறிய முடியும். எதிர்வரும் காலங்களில் அவருடைய தியாக நினைவை கடைப்பிடிப்பதும் திருகோணமலையில் அவரு க்கு சிலை வைப்பதும் காலத்தின் தேவை. இது அனைத்து தமிழர்களின் கடமை உணர்வாகும்.



# ஈழத்தமிழரின் அரசியல் ஆவணங்களும் இலங்கை அரசின் ஏமாற்றங்களும்.!

பா.அரியநேத்திரன்

கடந்த 2026 ஜனவரி 20 ல் இலங்கை தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சி வி கே சிவஞானமும், பதில் செயலாளர் எம் ஏ சுமந்திரனும், ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணி என சங்கு சின்னத்துடன் இயங்கும் ஈபிஆர்எல்எவ் சுரேஷ்பிரமச்சந்திரன், ரெலோ செல்வம் அடைக்கலநாதன், புளட் சித்தார்த்தன், ஜனநாய போராளிகள் கட்சி வேந்தன், சமத்துவக்கட்சி மு.சந்திரகுமார் ஆகியோர் கூடி தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய ஒரு ஆவணம் ஒன்றை தயாரிக்க தாம் முடிவெடுத்துள்ளதாக ஊடகங்களில் சுமந்திரனும்,சுரேசும் கூறியிருந்தனர்.

இதுவரையில் 78 வருடங்களாக தமிழ் தலைவர்கள் தயாரித்த ஆவணங்களும், கையளித்த உடன்படிக்கைகளும் குப்பைத்தொட்டியில் போனதுதான் மிச்சம். இப்போது இவர்கள் ஏதோ புதிதாக தயாரிக்கப் போகிறார்கள் என்று நாடகம் காட்டுகிறார்கள்.

1948 டிசம்பர் 18 ல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை தந்தை செல்வா ஆரம்பித்ததன் நோக்கமே ஈழத்தமிழ் இனத்துக்கான சமஷ்டி அடிப்படையிலான “தமிழரசு” ஒன்றை நிறுவும் நோக்கிலேயே அந்த கட்சிக்கு இலங்கை”தமிழரசு” கட்சி என்ற பெயரை சூட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949 டிசம்பர் 18 ல் ஆரம்பித்து அன்று தந்தை செல்வா ஆற்றிய தலைமை உரையில் கூறியது. “இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும் என்ற தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம் இப்போதிருக்கும் நிலைமையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு “சுதந்திர தமிழரசை” நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கை” என பேசியிருந்தார்.

அந்த கட்சியின் முதலாவது மாநாடு 1951 ஏப்ரல் 13, 14, 15 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா தலைமையில் நடந்தது. இம்மாநாட்டில், தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும், சிங்களவர்களுடன் சமஷ்டி அடிப்படையில் இணைந்து வாழ விரும்புவதாகவும் பிரதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமஷ்டி கொள்கை இருந்தமையால் அதனை சமஷ்டிக் கட்சி என்ற பெயரும் தமிழரசுக்கட்சி பெற்றது. ஈழத்தமிழர்களுக்கான தலைநகர் ‘திருகோணமலை’ என்பதும் அந்த மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

1957 ஜூலை 26 ல் பண்டா செல்வம் ஒப்பந்தம் முதன் முதலாக அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. வரலாற்று முக்கியமான அரசியல் ஒப்பந்தத்தில் தமிழ் மக்களுக்கு பன்முக ஆட்சிப் பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் 1957 அக்டோபர் 04ல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா உட்பட பல சிங்களத் தலைவர்கள் பலரும் கண்டித்து நடத்திய எதிர்ப்பு யாத்திரை காரணமாகவும் பௌத்த பிக்குகள் தீவிரமாக எதிர்த்தமையாலும் இந்த ஒப்பந்தமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1965 மார்ச் 24 ல் அப்போதைய இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழர் தரப்பு தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவை....

*** வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகவும் ஆவணங்கள் பதிவு செய்யும் மொழியாகவும் ஏற்கப்பட்டது.**

*** வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழி பயன்படுத்த உத்தரவாதம் தரப்பட்டது.**

*** பிரதேச ஆட்சிமுறை மன்றங்கள் தாபிக்கப்பட வேண்டும் என்று ஏற்கப்பட்டது. அவற்றிற்கடங்கலான விடயங்கள் இரு தலைவர்களாலும் பின்னர் நிர்ணயிக்கப்படவிருந்தது.**

*** காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிப்பங்கீடு சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் முக்கியமாகக் கருத்தில் எடுக்க உடன்பாடு ஏற்பட்டது.**

இந்த ஒப்பந்தமும் சிங்களத்தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது.



1976 அதே 14 ல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைகூட்டணி தந்தை செல்வா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஜி ஜி பொன்னம்பலம், இந்திய தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் உட்பட அன்றைய தமிழ் கட்சிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழீழ தனியரசு தீர்மானம் நிறைவேற்றியது.

அதில் ..

**01. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.**

**02.அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் சுயாட்சி உரிமை வேண்டும்.**

**03.அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புக்களோடு நாம் முன்னெடுக்கவேண்டும் என தந்தை செல்வநாயகம் தலைமையில் கூடிய இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.**

இந்த தீர்மானத்தை முன்னிறுத்தி 1977 ஜூலை 21 ல் வடகிழக்கு மக்கள் ஆணை தேர்தல் மூலம் கிடைத்தது.

அதன் பின்னர் 1985 ஜூலை 8-9,ஆகஸ்ட் 12,13 ல் பூட்டான் தலைநகர் திம்புவில் நடந்த பேச்சுவார்தையில் ஆயுதப்போராட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் அன்ரன், திலகர் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் : மு. சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஈ.பி.ஆர்.எல்.எவ்.சார்பில் அ. வரதராஜப் பெருமாள், எல்.கேதிஸ்வரன், டெலோ சார்பில்: சார்ள்ஸ் அன்ரனி தாஸ், மோகன், ஈரோஸ் சார்பில்.ராஜி சங்கர், ஈ. இரத்தினசபாபதி, புளொட் சார்பில் இரா வாசுதேவா, தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆகியோர் ஒப்பமிட்டு வழங்கிய ஆவணம் திம்பு கோட்பாடு என அழைக்கப்பட்டது.

அதில்..

*** இலங்கைத் தமிழர்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல்.**
*** இலங்கையில் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தாயகம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வது.**
*** தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.**
*** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து, அதற்கு சுயாட்சி வழங்குவதை அங்கீகரித்தல்.**

ஆகியவைகளை உள்ளடக்கிய ஆவணம் கையளித்தும் அதனையும் இலங்கை அரசு தட்டிக்கழித்தது..

அதன்பின்னரே 1987 ஜூலை 29ல் “இந்தியா-இலங்கை ஒப்பந்தம்” இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் கைச்சாத்திடப்பட்டு தொடர்ந்து அது அமுல் படுத்தப்படாமல் போனதால், அதன் விளைவுகளையும் அனுபவித்துக் கொண்டே இருக்கிறோம்.

2001 ஜனவரி 17 ல் பொங்குதமிழ் பிரகடனம் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம்,தமிழ் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே அதன் சுருக்கம்.

2016 செப்டம்பர் 24 ல் எழுக தமிழ் நிகழ்வில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி, ரெலோ, ஈபிஆர்எல்எவ்,புளட் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி வி விக்னேஸ்வரன்

தொடர்ச்சி: பக்கம் 14

# 78 ஆண்டுகளாகியும் ஈழத்தமிழருக்கான அடிப்படை உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுகின்றன.




**அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதழ் இணைந்து வழங்கும் 'தாயக களம்" நிகழ்ச்சியில், இலங்கையின் 78-ஆவது சுதந்திர தினம் ஈழத் தமிழர்களுக்கு ஏன் ஒரு "கரிநாள்" என்பதையும், அந்தநாளில் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற எதிர்ப்புகள், அரசின் நடைமுறைகள், இனவாத அரசியல், நில அபகரிப்பு, விகாரைமயமாக்கல், அரசியல் கைதிகள், இனப்படுகொலைக்கு நீதி, தமிழ்த் தலைமையின் தோல்விகள் மற்றும் எதிர்காலப் பொறுப்புகள் குறித்தும் விரிவாக உரையாடப்படுகிறது.**

**இந்த நேர்காணலில் தாயகத்திலிருந்து வல்வை அனந்தராஜ் அவர்கள் பங்கேற்கிறார்.**

**கேள்வி :**

**இன்று இலங்கையின் 78-ஆவது சுதந்திர தினம். ஈழத் தமிழர்களுக்கு இது ஏன் "கரிநாள்" எனக் கூறப்படுகிறது? அந்தநாளில் நீங்கள் அவதானித்த நிகழ்வுகள் என்ன?**

**பதில் :**

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றன. அந்த நிகழ்வுகள் முழுமையாக சிங்கள மயமாக இருந்தன. ஜனாதிபதியின் உரையில்கூட தமிழ் மொழிக்கு இடமில்லை. "இனவாதத்திற்கு இட மில்லை" என்ற வார்த்தைகள் பேசப்பட்டாலும், நடைமுறையில் அதற்கெதிரான செயல்பாடுகளே தொடர்ந்து நடக்கின்றன. இதற்கு மாறாக, வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர் தாயகப்பகுதிகளில் இந்த நாளை கரிநாளாகக் கருதி கருப்புக் கொடி கட்டி, கவனயீர்ப்பு மற்றும் எதிர்ப்பு போராட்டங்கள்நடைபெற்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் மக்கள் ஒன்று திரண்டு தங்களின்அதிருப்தி குரலை வெளிப்படுத்தினர். இலங்கையில் ஒரே நாளில் இரண்டு விதமான நிகழ்வுகள் நடந்தன. ஒன்றுசிங்கள பகுதிகளில் நடைபெற்ற அரசின் சுதந்திர தின விழாக்கள், மற்றொன்று சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்களின்எதிர்ப்புக் குரல்கள்.

**கேள்வி :**

**ஜனாதிபதி "இனவாதத்திற்கு இடமில்லை" என கூறுகிறார். ஆனால் நிலத்தில் நடப்பது அதற்கு மாறாகத் தோன்றுகிறதே?**

**பதில் :**

அது உண்மை. பேச்சும் நடைமுறையும் முற்றிலும் வேறுபடுகின்றன. தமிழர்கள் வாழாத பகுதிகளில்கூட புதிதுபுதிதாக விகாரைகள் கட்டப்படுகின்றன. திருகோணமலை, நாவற்குழி போன்ற இடங்களில் சிங்கள மக்கள் இல்லாதபோதும் விகாரமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. தனியார் காணிகளில் பலாத்காரமாக விகாரைகள் எழுப்பப்படுகின்றன. இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு தலையிடவில்லை. நல்லிணக்கம் பேசப்படும் இடத்தில், நடைமுறையில் "இது சிங்கள-பௌத்த நாடு" என்ற அடையாளப்படுத்தலே முன்வைக்கப்படுகின்றது.

**கேள்வி :**

**தமிழர் நிலங்கள், அகதிகள், வீடமைப்பு தொடர்பான நிலைமை எப்படியுள்ளது?**

**பதில் :**

தமிழர்களின் நிலங்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கானோர் உள்ளக அகதிகளாக வாழ்கிறார்கள்.நிலமின்றி, வீடின்றி மக்கள் தவிக்கிறார்கள். அரசுக்கு வெளிநாடுகளிலிருந்து பெரும் நிதி வருகிறது. ஆனால் அந்தநிதி, நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கி வீடுகள் கட்டிக் கொடுக்கப் பயன்படுத்தப்படவில்லை. சிங்கள மக்களுடன்இணைந்து வாழ்வதில் தமிழர்களுக்கு எதிர்ப்பு இல்லை. ஆனால் பலாத்கார குடியேற்றம் மூலம் மக்களின் இருப்பைஅழிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு வல்வை அனந்தராஜ் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர் காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**அரசியல் கைதிகள் விவகாரத்தில் தற்போதைய அரசின் நிலைப்பாடு என்ன?**

**பதில் :**

சில சிறிய குற்றங்களுக்காக அபராதம் செலுத்தாதவர்களை விடுவித்ததாக அரசு கூறுகிறது. ஆனால் எந்தக்குற்றச்சாட்டுமின்றி, அல்லது அரசியல் காரணங்களுக்காக, 10, 15, 30 ஆண்டுகளாக சிறையில் வாடும் அரசியல்கைதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. சுதாகரன் போன்றவர்கள் பல ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களின் குடும்பங்கள் சிதைந்துள்ளன. இத்தகைய மனிதாபிமான பிரச்சினைகளைக் கூட அரசு கவனிக்கவில்லை.

**கேள்வி :**

**இன்றைய எதிர்ப்புப் போராட்டங்களை யார் முன்னெடுக்கிறார்கள்?**

**பதில் :**

பெரும்பாலும் இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களுமே இந்த கரிநாள் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். தமிழ் அரசியல்வாதிகள் பெரும்பாலும் இதைத் தலைமையேற்று நடத்தவில்லை. சிலஇடங்களில் போராட்டங்கள் அடக்குமுறையால் கலைக்கப்பட்டன. இது சுதந்திர தினம் கொண்டாடும் நிலை அல்ல. மாறாக, அரசியல் அமைப்பிலும் அரசு நடைமுறையிலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால்தான் கொண்டாடத்தகுதி உண்டு.

**கேள்வி :**

**தமிழ் அரசியல் தலைமையின் தோல்விகள் குறித்து உங்கள் பார்வை என்ன?**

**பதில் :**

2009 இனப்படுகொலைக்குப் பிறகும், இனவாத அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக வாக்களிக்கச் சொல்லியவர்கள் தமிழ்அரசியல் தலைவர்கள் தான். வெளியே தேசியம் பேசிவிட்டு, உள்ளே ஆசன அரசியலில் ஈடுபடுவது தொடர்கிறது. கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும்,தேர்தல் வந்தவுடன் ஒன்றிணைந்து ஆசனப் பங்கீடு பேசப்படுகிறது. இதனால் மக்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகிறார்கள்.

**கேள்வி :**

**தேசிய தலைவர் பிரபாகரன் குறித்து நீங்கள் வலியுறுத்தும் முக்கிய அம்சம் என்ன?**

**பதில் :**

தேசிய தலைவர் போராட்டத்தை மட்டும் நடத்தவில்லை. மக்களைப் பாதுகாத்தார். பிடிபட்ட எதிரிகளைக் கூடமனிதாபிமானத்துடன் கையாண்டார். சாதாரண மக்களுக்கு எதிராக படுகொலைகளை அவர் நடத்தவில்லை. இறுதியுத்த காலத்திலும், சிங்கள மக்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இத்தகைய பெருந்தன்மை கொண்ட தலைமையைக் தமிழ் மக்கள் பெற்றிருந்தனர்.

**கேள்வி :**

**இனப்படுகொலைக்கு நீதி மற்றும் சர்வதேசப் பொறுப்பு குறித்து என்ன செய்ய வேண்டும்?**

**பதில் :**

நடைபெற்ற இனப்படுகொலைக்கு சுயாதீனமான சர்வதேச நீதிவிசாரணை அவசியம். குற்றம் செய்தவர்களால் நீதிவிசாரணை நடத்த முடியாது. செம்மணி போன்ற mass grave விவகாரங்கள் இன்றுவரை முடிவின்றி உள்ளன.சாட்சியங்கள் வெளிப்படையாக இருக்கும்போதும், அரசுகள் மௌனம் காக்கின்றன. இது மாற்றப்பட வேண்டும்.

**கேள்வி :**

**தேசிய தலைவரின் வரலாற்று இடங்கள், குறிப்பாக அவர் தொடர்புடைய காணி குறித்து என்ன நிலை?**

**பதில் :**

அது தலைவர் வாழ்ந்த முக்கியமான வரலாற்று இடம். ராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்ட அந்த காணி, பலஆண்டுகளாக குப்பைக் களமாக உள்ளது. அந்த காணியைப் பாதுகாத்து, மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன்படும்ஒரு நினைவகமாக அல்லது மண்டபமாக உருவாக்க வேண்டும் என்ற முயற்சிகள் பேசப்பட்டு வருகின்றன. இதுதனிநபர் வீடு அல்ல; ஒரு வரலாற்று மையம். இதை பாதுகாப்பது அடுத்த தலைமுறைக்கான கடமை.

தொடர்ச்சி: பக்கம் 12

# சுதந்திர தினமா? கரி நாளா?

மட்டு.நகரான்





இலங்கையின் 78வது சுதந்திர தினம் இலங்கை தீவில் சிங்கள பெரும்பான்மையினத்தினால் கோலாகலமாக கொண்டாடப்பட்ட அதேநேரத்தில் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் தேசிய கரிநாள் பிரகடனம் செய்யப்பட்டு இலங்கையின் சுதந்திர தினத்தினை தமிழர்கள் துக்க தினமாகவும் உரிமை மறுப்பு தினமாகவும் அனுஸ்டித்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. குடியுரிமைச்சட்டம், வாக்குரிமைச்சட்டம் என்பன கொண்டு வந்து மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்ற மக்களாக மாற்றியது மட்டுமன்றி தமிழர்களின் மேலாண்மையினை முடக்கும் வகையில் தொடர்ச்சியாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. காலம்காலமாக ஆட்சிப்பீடமேறிய சிங்கள ஆட்சியாளர்கள் இந்த நாட்டினை முன்னேற்றுவது குறித்து எந்த காலத்திலும் சிந்திக்காது இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களை எவ்வாறு அடக்கி ஒடுக்கலாம்,எவ்வாறு தமது சிங்கள மேலாதிக்கத்தினை நிலைநாட்டலாம் என்று சிந்தித்து செயற்பட்டவர்களாகவே இருந்துவருகின்றனர். இதில் இலங்கையில் எந்த ஆட்சியாளர்களும் விதிவிலக்கற்றவர்களாகவே இருந்துவருகின்றனர்.



இதன்காரணமாகவே இந்த நாட்டில் அனைத்து வளங்களையும் கொண்ட தமிழ் சமூகம் தமது இருப்பினை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர்.அகிம்சை போராட்டம் தொடக்கம் ஆயுதப்போராட்டம்,இராஜதந்திரபோராட்டம் என பல்வேறு வகையான போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையிலேயே ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு போராட்டங்களை தமிழர் சமூகம் முன்னெடுத்துவருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே இலங்கையின் சுதந்திர தினத்தினை அது சிங்கள மக்களுக்கான சுதந்திரம் மட்டுமேயன்றி அது தமிழர்களுக்கான கரிநாள் என்பதை பிரகடனப்படுத்தி போராட்டங்கள் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த போராட்டங்களை வெறுமனே ஒரு போராட்டமாக கடந்துசெல்ல முடியாது. ஏனெனில் இந்த போராட்டம் மீது இலங்கை அரசாங்கமே அச்சம் கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது என்பது அந்த போராட்ட நேரத்தில் இடம்பெற்ற சம்பவங்களே சாட்சியங்களாகவுள்ளன.

இன்றைய ஆட்சியாளர்கள் தங்களது இந்த நாட்டினை மீட்கவந்த மீட்பர்களாகவும் தமிழ் மக்களை பாதுகாக்கவந்த பாதுகாவலர்களாகவும் இலங்கைக்குள் மட்டுமன்றி சர்வதேசத்திற்கும் காட்டுவதற்கான செயற்பாடுகளை அண்மைக்காலமாக முன்னெடுத்து வருவதை காணமுடிகின்றது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தினையும் கிழக்கு மாகாணத்தினையும் வேறுபடுத்தியவகையிலும் வடக்கு மாகாணத்தின் மக்களை மட்டும் பேசுபொருளாகவும் தமக்கு சார்பானவர்களாகவும் காட்டி தமிழ் மக்கள் உரிமைசார்ந்த விடயங்களை விடுத்து தமிழ் மக்கள் தமது ஆட்சியதிகாரத்தினை ஏற்று வாழும் நிலையில் உள்ளார்கள் என்பதை காட்டுவதற்கான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலேயே இந்த கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த போராட்டங்களை தடுப்பதற்கு பல்வேறு பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன.குறிப்பாக கிழக்கில் நடைபெற்ற போராட்டத்தினை தடுப்பதற்கு இலங்கையின் பாதுகாப்பு துறை மிக மோசமான செயற்பாடுகளை முன்னெடுத்தது.

மட்டக்களப்பில் நடைபெற்ற கிழக்கு மாகாணத்திற்கான போராட்டத்திற்கு திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் வந்த மக்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது.மகிந்த ,கோத்தபாய ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதையும் விட மிக மோசமான செயற்பாடுகள் இந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டன.அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பகுதியிலிருந்து வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளை ஏற்றிவந்த இரு பஸ்கள் அக்கரைப்பற்று இராணுவ முகாமுக்கு அருகில் நிறுத்தப்பட்டு அதற்கு ஏறிய இலங்கை இராணுவ புலனாய்வுத்துறையை சேர்ந்தவர்களினால் இரண்டு பஸ்களிலும் சிறிய கஞ்சா பொதிகளை வைத்துவிட்டு பஸ்ஸில் கஞ்சா கடத்துவதாக கூறி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

அங்கு விசாரணையின்போது இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள்தான் தமது வாகனங்களுக்குள் கஞ்சாவினை எடுத்ததாக அதில்வந்த வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனைவரும் தெரிவித்ததையடுத்து பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அங்கிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்துகொண்டிருக்கும்போது அக்கரைப்பற்று மணிக்கூண்டு கோபுரத்திற்கு அருகில் போதையுடன் பஸ்களை இளைஞர்கள் குழுவொன்று கைகளில் தேசியக்கொடிகளுடன் வழிமறித்து அவர்களுடன் முரண்பட்ட நிலையும் ஏற் பட்டது. அங்குவந்தவர்கள் வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் சிங்கள இளைஞர்கள் என அப்பகுதி தகவல்கள் தெரிவித்தன.



அவ்வாறானால் கிழக்கில் நடைபெற்ற போராட்டத்தினை தடுப்பதற்கு பல்வேறு இடையூறுகள் முன்னெடுக்கப்பட்டன.திருகோணமலையில் இருந்து வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் வந்த பஸ்கள் மறிக்கப்பட்டு புலனாய்வுத்துறையினரால் தகவல்கள் பெறப்பட்டுள்ளது.இதேபோன்று மட்டக்களப்பில் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த பொலிஸார் போராட்டத்தினை நடாத்துவதற்கான தடைகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

“அனுரவின் காலத்தில் நமது தமிழ் மக்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என கூறிக் கொண்டிருக்கிறார்கள்.; ஆனால் கரிநாள் போராட்டத்தின் போது அனுர அரசு இரகசியமான முறையில் எல்லோரையும் அனுப்பி எங்களை அழிக்க தூண்டுகின்றது” என அம்பாறை மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி தம்பிராஜா செல்வராணி தெரிவித்தார்.

“கஞ்சாவை கொண்டு எங்களது போராட்டத்தை குழப்புவதற்கு வழி செய்ய வேண்டாம் என்று கூறினோம். அந்த இடத்தில் எங்களது தாய்மார்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தனர். ஒரு மணி நேரம் அவ்விடத்தில் எங்களை வைத்து என்னையும் சாரதியையும் அழைத்து போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணையை செய்தனர்.

விசாரணையின் போது கூறினார்கள் அதற்குள் இருந்த கஞ்சாவை ஆமீ புலனாய்வு பிரிவினர்தான் வைத்தார்கள் என்று கூறினார்கள். அதன் பின்னர் எங்களை விட்டார்கள். இந்த முறை தான் நமக்கு எவருக்குமே நீதிமன்ற தடை உத்தரவு வரவில்லை ஆனால் மாற்று வழியாக இவ்வாறான செயற்பாடுகளை இந்த அனுர அரசு செய்கின்றது. உண்மையில் அவரது காலத்தில் நமது தமிழ் மக்கள் நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கரிநாள் போராட்டத்தின்போது நடைபெற்ற நிகழ்வு அனுர அரசு ரகசியமான முறையில் எல்லோரையும் அனுப்பி எங்களை அழிக்க தூண்டுகின்றது எங்களுக்கு தோன்றுகின்றது. உண்மையில் இந்த சுதந்திர தினத்தை 78 ஆண்டுகளாக தமிழர்களாகிய நாங்கள் இந்த சுதந்திர தினத்தை இவ்வாறு தான் செய்து வருகின்றோம். ஏனென்றால் உண்மையில் நமக்கு சுதந்திரம் இல்லை. எங்களது கணவர்களை பிள்ளைகளை தொலைத்து விட்டு எங்களது தாய்மார்கள் 350 பேரை நாங்கள் இழந்து நிற்கின்றோம்.

அடுத்த வருடம் நாங்களும் இறப்போமோ இருப்போமோ தெரியாது.தமிழர்களுக்கான நீதி எப்போது கிடைக்கின்றதோ அப்போது தான் நமக்கு நிரந்தரமான சுதந்திரம் என தெரிவித்தார்.

இவ்வாறான உணர்வுகள் என்பது இன்று தமிழ் மக்களிடம் மேல் எழும் நிலைமை காணப்படுகின்றது. காரணம் கடந்த ஒன்றரை வருடமாக என்பிபி மோகத்திற்குள் மூழ்கிய சமூகம் இன்று விழிக்கும் நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி: பக்கம் 15



# 1750: பெருந்தோட்ட தொழிலாளர்களின் பொருளாதார விடுதலையா அல்லது காலத்தின் கட்டாயமா?

மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாகத் திகழும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டலில் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இருப்பினும், அந்த துறையில் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் வேதனம் தொடர்பான விடயங்கள் நீண்டகாலமாக விவாதத்திற்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றன. அண்மையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தினசரி வேதனத்தை 1,750 ரூபாவாக உயர்த்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்பாட்டை எட்டியுள்ளது.



2026 ஜனவரி 30ஆம் திகதி உத்தியோகபூர்வமாகக் கையெழுத்திடப்பட்ட இந்த உடன்பாடு, தொழிலாளர் சமூகத்தில் ஒரு புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழலில் பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது. 2026ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு இணங்க, இந்த வேதன உயர்வு நடைமுறைப்படுத்தப்படுகிறது. முன்னதாக 1,350 ரூபாவாக இருந்த பெருந்தோட்ட தொழிலாளர்களின் தினசரி வேதனம், தற்போது 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1,750 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் முக்கிய அம்சம் என்னவென்றால், இந்த 400 ரூபாய் அதிகரிப்பில் 200 ரூபாயை அந்தந்தப் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளும், மிகுதி 200 ரூபாயை அரசாங்கமும் ஒரு விசேட வரவு - செலவுத் திட்ட கொடுப்பனவாக வழங்க இணக்கம் கண்டுள்ளன. அதன்படி, தொழிலாளர்களின் அடிப்படை தினசரி வேதனம் 1,550 ரூபாவாகவும், அரசாங்கம் வழங்கும் வருகைக்கான ஊக்குவிப்புத் தொகையாக 200 ரூபாவாகவும் அமையவுள்ளது.

இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள வேதனம் 2026 ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அதிகரிப்புடனான வேதனம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பெருந்தோட்ட தொழிலாளர்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சாதகத் தன்மைகளும் காணப்படுகின்றன.

இதன்படி, இலங்கை எதிர்கொண்ட மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்கம் காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மூன்று முதல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில், 1,350 ரூபாய் என்ற வேதனம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்க வில்லை. இந்த 1,750 ரூபாய் அதிகரிப்பு, அவர்களின் கொள்முதல் சக்தியை ஓரளவுக்கு உயர்த்தி, ஓரளவு கௌரவமான வாழ்க்கையை வாழ வழிவகுக்கும்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், ஒரு தடவையில் வழங்கப்பட்ட மிகப்பெரிய வேதன உயர்வாக இது கருதப்படுகிறது. இது தொழிலாளர்களின் உழைப்பிற்கு வழங்கப்பட்ட ஒரு தார்மீக அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது. வழமையாக வேதன உயர்வு விடயத்தில் கம்பனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நீண்டகால இழுபறிகள் நிலவும்.



ஆனால், இம்முறை அரசாங்கம் நேரடியாகத் தலையிட்டு, தனது வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு பகுதியை வழங்க முன்வந்திருப்பது ஒரு புதிய முன்னுதாரணமாகும். வேதன உயர்வு மூலம் தொழிலாளர்களின் குடும்பங்களில் போசாக்கு மட்டம் மற்றும் பிள்ளைகளின் கல்விக்கான செலவுகளைச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

குறிப்பாக, வறுமைச் சுழற்சியில் இருந்து விடுபட கல்வி மிக முக்கியமானது என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ள நிலையில், இந்த கூடுதல் வருமானம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும். எவ்வாறாயினும் வேதன உயர்வில் உள்ள பாதகமான விடயங்கள் மற்றும் சவால்கள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது.

அரசாங்கத்துக்கும் பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இந்த உடன் பாட்டின் மீதான மிக முக்கியமான விமர்சனம் என்னவென்றால், தனியார் துறையினரால் நிர்வகிக்கப்படும் கம்பனிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வரி செலுத்துவோரின் பொதுப் பணத்திலிருந்து ஊதியம் வழங்குவதாகும்.

ஒரு தனியார் நிறுவனம் இலாபம் ஈட்டும்போது அரசாங்கம் பங்கு கோருவதில்லை, ஆனால் வேதனம் வழங்கும்போது அரசாங்கம் பொறுப்பேற்பது நிதி ஒழுக்கத்திற்கு முரணானது என சில பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதேநேரம், அரசாங்கம் வழங்கும் 200 ரூபாய் 'வருகைக்கான ஊக்குவிப்புத் தொகை' என்பதால், தொழிலாளர்கள் அதிக நாட்கள் வேலைக்குச் சென்றால் மட்டுமே முழுமையான பலனைப் பெற முடியும். நோய் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் வேலைக்குச் செல்ல முடியாதபோது அவர்களின் வருமானம் மீண்டும் குறைய வாய்ப்புள்ளது.

விலைவாசி தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்த 1,750 ரூபாய் என்பது இன்று ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்குப் போதுமானதா என்ற கேள்வி எழுகிறது. அதிகரித்த சம்பளம் கையில் கிடைக்கும் போதே சந்தையில் பொருட்களின் விலைகளும் அதிகரிக்குமானால், இந்த உயர்வின் உண்மையான பலன் தொழிலாளர்களைச் சென்றடையாது.

தனது பங்காக 200 ரூபாயை அதிகரிக்க வேண்டியுள்ளதால், பெருந்தோட்டக் கம்பனிகள் ஆண்டுக்கு மேலதிகமாக 6 பில்லியன் ரூபாயைச் செலவிட வேண்டியுள்ளது. இதனால் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திச் செலவு அதிகரித்து, சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலையின் விலையதிகரிக்கக் கூடும். இது ஏற்றுமதிப் போட்டியைக் குறைக்க வாய்ப்புள்ளது.

### பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கத்தின் நிதிப் பலம்

இலங்கை தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. இவ்வாறானதொரு சூழலில், அரசாங்கத்தினால் எவ்வளவு காலத்துக்கு இந்த 200 ரூபாய் மேலதிக கொடுப்பனவைச் செலுத்த முடியும் என்பது ஒரு பாரிய வினாவாகும்.

2026 வரவு - செலவுத் திட்டத்தில் இதற்காக 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய ஆண்டிற்குப் போதுமானதாக இருக்கலாம். ஆனால், வரும் ஆண்டுகளில் அரசாங்கத்தின் வருமானம் குறையும் பட்சத்தில் அல்லது கடன் மறுசீரமைப்புச் சவால்கள் ஏற்படும் பட்சத்தில், இந்தப் பணத்தை வழங்குவது திறைசேரிக்கு பெரும் சுமையாக மாறும்.

ஒரு நீண்டகாலத் திட்டமாகப் பார்க்கும்போது,

தொடர்ச்சி: பக்கம் 14




# ஒன்றிய அரசின் பட்ஜெட்: கணக்குப் புத்தகமா? அல்லது தமிழ்நாட்டின் இடத்தை அளக்கும் அரசியல் கண்ணாடியா?

**ஆதி:**
சட்டவாளர் -தமிழ் நாடு




ஒன்றிய பட்ஜெட் என்பது வரவு - செலவு கணக்குப் பட்டியல் மட்டுமல்ல. அது நாட்டை யார், எந்த திசையில் நடத்த நினைக்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தும் ஒரு அரசியல் ஆவணம். அதனால்தான் ஒவ்வொரு ஒன்றிய பட்ஜெட்டுக்குப் பிறகும் தமிழ்நாட்டில் “நமக்கு ஏன் இப்படி?” என்ற கேள்வி எழுகிறது. இது திடீர் கோபம் அல்ல; பட்ஜெட்டில் உள்ள அம்சங்களைப் பார்த்தால் அந்த உணர்வுக்கான காரணங்கள் தெளிவாக புரிகின்றன.



பட்ஜெட்டில் பெரும்பாலும் தேசிய நெடுஞ்சாலைகள், ரயில் விரிவாக்கம், தொழிற்சாலை வழித்தடங்கள், பாதுகாப்பு தொடர்பான பெரிய திட்டங்கள் முக்கியமாக பேசப்படுகின்றன. இவை நாட்டின் சில பகுதிகளில் அதிக கவனம் பெறுகின்றன. தமிழ்நாட்டுக்கு வந்தால், ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படுகிறது;ஆனால் புதிய, பெரிய திட்டங்களுக்கு குறைவாகவே ஒதுக்கப்படுகிறது. இதனால், “நாம் நாட்டின் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பு செய்கிறோம்; ஆனால் நமக்கான புதிய வாய்ப்புகள் எங்கே?” என்ற கேள்வி எழுகிறது.

பல திட்டங்கள் மாநில அரசை ஒதுக்கி வைத்து, ஒன்றிய அரசு நேரடியாக மக்களிடம் செலுத்தும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பணம் ஒன்றிய அரசிலிருந்து வருகிறது; ஆனால் அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதில் மாநில அரசுக்கு அதிக சுதந்திரம் இல்லை. இதனால் மாநில அரசின் பங்கு குறைவு, மாநில அரசியல் முக்கியத்துவம் குறைவதாக உணரப்படுகிறது.



பட்ஜெட்டில் “சார்புடைய கலாசார மேம்பாடு”, “பாரம்பரிய நகர மேம்பாடு” போன்ற தலைப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக வட இந்தியாவின் சில பகுதிகளில் முன்னுரிமை வாய்ந்த திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாட்டின் சங்க கால வரலாறு, தமிழ் மொழியின் தொன்மை, தமிழ் பண்பாட்டு மரபு ஆகியவற்றுக்கு ஒன்றிய ஆதரவு அதே அளவில் இல்லை. இதனால், “தமிழ் தேசிய இருப்பை மதிப்பதில்லை” என்ற உணர்வு உருவாகிறது.

தமிழ்நாடு அதிக வரி செலுத்தும் மாநிலங்களில் ஒன்றாகும். ஆனால் அந்த வரி மீண்டும் மாநிலங்களுக்கு பகிரப்படும் போது, மக்கள் தொகை அதிகம் உள்ள மற்றும் பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிகமாக செல்கிறது. வளர்ச்சியில் முன்னேறிய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு குறைவாக கிடைக்கும். மக்கள் சொல்வது: “நல்லா நடந்துகிட்டதுக்கு பரிசு இல்லை. தண்டனை மாதிரி இருக்கு.”




GST வந்த பிறகு, மாநிலங்களுக்கு இருந்த சொந்த வரி அதிகாரம் குறைந்துவிட்டது. கல்வி, சுகாதாரம், சமூக நலத்திட்டங்கள் போன்ற பொறுப்புகள் மாநில அரசிடமே தொடர்கின்றன. பணம் ஒன்றிய அரசின் பொறுப்பு மாநிலத்தில் – இந்த நிலை மாநிலங்களின் நிதி அழுத்தத்தை அதிகரிக்கிறது. பட்ஜெட்டில் இதைச் சமாளிக்கப் பெரிய தீர்வு இல்லை என்ற எண்ணமும் உள்ளது.

இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டிப் பார்த்தால், இது வெறும் “பணம் குறைவாக கிடைக்கிறது” என்ற பிரச்சினை மட்டும் அல்ல. இது நாடு எப்படி இயங்க வேண்டும் என்ற இரண்டு வேறு கோட்பாடுகளுக்கிடையிலான முரண்பாடு. ஒருபக்கம் எல்லா அதிகாரமும் ஒன்றிய அரசில் இருக்க வேண்டும்; ஒரே வழியில் முடிவுகள் வர வேண்டும் என்ற மையவாத கோட்பாடு. மறுபக்கம் இந்தியா பல மொழிகள், பல பண்பாடுகள் கொண்ட நாடு; மாநிலங்களுக்கு உரிமையும் மரியாதையும் இருக்க வேண்டும் என்ற கூட்டாட்சிக் கோட்பாடு.

தமிழ்நாட்டில் வலுவாக இருக்கும் தமிழ் அரசியல், கூட்டாட்சி கோட்பாட்டை ஆதரிக்கிறது. அதனால்தான் ஒன்றிய பட்ஜெட்டில் வெளிப்படும் மையப்படுத்தும் போக்கு, தமிழ்நாட்டில் எதிர்ப்பையும் சந்தேகத்தையும் உருவாக்குகிறது. சிலர் இதை தமிழ் தேசிய எழுச்சியை மெதுவாக பலவீனப்படுத்தும் முயற்சியாகவும் பார்க்கிறார்கள்.

அதனால், “தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது” என்ற பேச்சு சும்மா அரசியல் கோஷம் அல்ல. அது – “நாம் நாட்டில் சமமாக நடத்தப்படுகிறோமா? நமது மொழி, பண்பாடு, தமிழ் தேசிய இருப்பு மதிக்கப்படுகிறதா?” என்ற ஒரு சாதாரண மனிதனின் நேர்மையான கேள்வி. அந்தக் கேள்விக்கு தெளிவான, நியாயமான பதில் கிடைக்கும் வரை, ஒவ்வொரு ஒன்றிய பட்ஜெட்டும் தமிழ்நாட்டில் இதே விவாதத்தை மீண்டும் மீண்டும் உருவாக்கிக்கொண்டே இருக்கும்.

• • •

# நீதிக்காகப் பேசும் குடியுரிமை: போராட்டத்தை அர்ப்பணித்த இளம் குடிமகள் ரேணுகா இன்பகுமார்



**ரேணுகா இன்பகுமார், நியூ சவுத் வேல்ஸ் ஆஸ்திரேலியாவின் கம்பர்லேண்ட் நகர சபையால் ஆண்டின் இளம் குடிமகனாக கௌரவிக்கப்பட்டார்.**

ரேணுகா இந்த விருதை தமிழ் ஈழத்திற்கும், நீதி மறுக்கப்பட்ட தாயகத்திற்கும், இன்னும் பாது காப்பு, நிரந்தரம் மற்றும் கண்ணியம் மறுக்கப்படும் எண்ணற்ற அகதிகளுக்கும் - ஆஸ்திரேலியாவை வீடு என்று அழைத்தாலும், கல்வி, சுகாதாரம் மற்றும் எதிர் காலம் இல்லாமல் பூட்டப்பட்ட நிலையில் வளரும் எண்ணற்ற அகதிகளுக்கும் அர்ப்பணிக்கிறார். நமது தமிழ் ஈழப் போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக் கும் தங்கள் கட்டாயமாக காணாமல் போன அன்புக்குரிய வர்களுக்காகப் போராடும் எண்ணற்ற தாய்மார்கள் மற்றும் தந்தையர்களுக்கும் ரேணுகா இந்த விருதை அர்ப்பணிக்கிறார்.



இந்த அங்கீகாரத்தை அர்ப்பணிப்பதில், ரேணுகா மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் வார்த்தைகளைப் பிரதிபலிக்கிறார்:

“எந்தவொரு தேசமும் போராட்டம் இல்லாமல் சுதந்திரம் பெற்றதில்லை என்பதை வரலாறு நமக்குக் காட்டுகிறது.” இந்த விருது மௌனம் அல்லது இணக் கத்தின் மூலம் சொந்தமானதற்கான சின்னம் அல்ல. குடியுரிமை - உண்மையான குடியுரிமை - பொறுப்பு பற்றி யது என்பதை இது நினைவூட்டுகிறது. அமைப்புகள் தீங்கு விளைவிக்கும் போது பேச வேண்டிய பொறுப்பு. முதல் தேச மக்களுடன் நிற்க. அகதிகளுடன் நிற்க. தேர்ந்தெடுக்கப்பட்ட நீதியை மறுக்க.





இந்த அங்கீகாரம் காத்திருக்கும் வளர்ந்த ஒவ் வொரு அகதி குழந்தைக்கும் சொந்தமானது. இன்னும் வாழ போராடும் ஒவ்வொரு இடம்பெயர்ந்த தேசத்திற்கும். நீதியை உண்மையிலிருந்து பிரிக்க மறுக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும்.




இந்த விருது போராட்டத்தின் முடிவு அல்ல - எதிர்ப்பு வாழ்கிறது, உண்மையை அழிக்க முடியாது, மற்றும் வெளியேற்றத்தின் மீது கட்டமைக்கப்பட்ட எந்த அமைப்பும் நீதிக்காக போராடுபவர்களை விட நிலைக் காது என்பதற்கு இது சான்றாகும்.

பணி தொடர்கிறது. போராட்டம் தொடர்கிறது. மேலும் விடுதலை - முதல் தேச மக்களுக்காக, அகதிகளுக் காக, தமிழ் ஈழத்திற்காக - பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது அல்ல.

• • •

## 78 ஆண்டுகளாகியும் ... தொடர்ச்சி...

**கேள்வி :**

**இறுதியாக, இந்த 78-ஆவது சுதந்திர தினம் குறித்து உங்கள் முடிவு என்ன?**

**பதில் :**

இலங்கை அரசு சுதந்திர தினங்களை தொடர்ந்து கொண்டாடும். தமிழர்கள் தொடர்ந்து இதை கரிநாளாகநினைவுகூர்வார்கள். அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், உண்மையான சுதந்திரம் இல்லை. வரலாறுமறைக்கப்படுகிறது. ஆகவே எழுத்தாளர்கள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் இந்த உண்மைகளை ஆவணப்படுத்தவேண்டும். இல்லையெனில், அடுத்த தலை முறைகள் நடந்த படுகொலைகளை அறியாமலேயே வளர்ந்து விடும். அதுதான் இன்று தமிழர்கள் எதிர்கொள் ளும் மிகப்பெரிய அபாயம்.

• • •

## இனி இந்தியர்களுக்கு ... தொடர்ச்சி...

அலுவலகங்களை அது அமைத்து வருகின்றது. இது கூகிளின் முழு இந்திய ஊழியர்களின் எண்ணிக்கையை 14,000 இலிருந்து 34,000 ஆக இரட்டிப்பாக்கும். எளிய எண்கணிதத்தின் படி. ட்ரம்பின் H-1B விசா தொடர்பான புதிய அறிவிப்பு ஒரு புதிய மனுவிற்கு விசா கட்டணத்தை $4,500 இலிருந்து $100,000 ஆக உயர்த்தியது.

கூகிள் ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான H-1B விண்ணப்பங்களை தாக்கல் செய்கிறது. பழைய விகிதத்தில, 1,000பொறியாளர்களை பணிக்கு அமர்த்து வதற்கு தோராயமாக 4.5 மில்லியன் டொலர்கள் செல வாகும். புதிய கட்டணப்படி, அதே குழுவிற்கு 100 மில்லி யன் டொலர்கள் செலவாகும். அந்த 100 மில்லியன் டொலர்களுக்கு, கூகிள் பெங்களூரில் 2.4 மில்லியன் சதுர அடியை குத்தகைக்கு எடுத்து, அதே பொறியாளர்களை பல ஆண்டுகளாக இந்திய சந்தை சம்பளத்தில் பணிய மர்த்தலாம்.

இது FAANG அமெரிக்க தொழிலாளர்களை உண் மையான நேரத்தில் கட மைக்கு அமர்த்துவதை ஊக்கு விக்கும்.. அமேசான் ஆண்டுதோறும் 10,000 க்கும் மேற்பட்ட H-1B தொழிலாளர்களுக்கு நிதியுதவி செய்கிறது. மைக்ரோசாப்ட், மெட்டா, ஆப்பிள் ஆகிய நிறுவனங்கள் அனைத்தும் ஒரே மாதிரியான கணிதத்தைத்தான் தற்போது செய்கின்றன. இது யாரும் விலை நிர்ணயம் செய்யாத பகுதி.

இந்தியாவின் FAANG பணியாளர்களின் எண் ணிக்கை கடந்த 12 மாதங்களில் 16% வளர்ச்சியடைந்தது, மூன்று ஆண்டுகளில் இது மிகப்பெரிய ஏற்றம், H-1B கட்டணம் அமெரிக்க வேலைகளைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையில் அது செய்தது என்னவென்றால், ஒவ்வொரு பெரிய தொழில்நுட்ப நிறுவனமும் தொழிலாளர்களை தற்காலிகமாக இறக்குமதி செய்வதற்குப் பதிலாக நிரந்தரமாக வெளிநாடுகளுக்கு வேலைகளை மாற்றுவதை பொருளாதார ரீதியாக பகுத்தறிவுள்ளதாக மாற்றியுள்ளன. இந்த நிலையில் அமெரிக்காவில் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் இறுதியில் வீட்டிற்குச் செல்கிறார்கள். பெங்களூரு அலுவலகங்கள் அல்ல.

## லிபிய முன்னாள் தலைவர் ... தொடர்ச்சி...

2011 ஆம் ஆண்டு அமைதியின்மையின் போது நடந்த போராட்டங்களை ஒடுக்குவதில் அவர் வகித்த பங்கிற் காக. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அவர் மீது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை தனித்தனியாகக் குற் றம் சாட்டியது. ஆனால், சைஃப் அல்-இஸ்லாம் 2017 இல் பொது மன்னிப்பின் ஒரு பகுதியாக விடுவிக்கப்பட்டார்.

2021 ஆம் ஆண்டில், டிசம்பரில் திட்டமிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக அவர் பதிவு செய்தார், ஆனால் அரசியல் முட்டுக்கட்டைக்கு மத்தியில் வாக்குப்பதிவு இறுதியில் நிறுத்தப்பட்டது.

1969 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் முயம்மர் கடாபி ஆட்சியைக் கைப்பற்றி, எண்ணெய் வளம் மிக்க அந்த நாட்டை 2011 இல் அமெரிக்க தலைமை யிலான இராணுவத் தலையீட்டின் ஆதரவுடன் கிளர்ச்சி யாளர்களால் கொல்லப்படும் வரை ஆட்சி செய்தார்.

அன்றிலிருந்து லிபியா அவ்வப்போது உள்நாட்டுப் போரை அனுபவித்து வருகிறது, மேலும் மேற்கு மற்றும் கிழக்கில் போட்டி அரசாங்கங்களுக்கு இடையில் பிளவு பட்டுள்ளது. அரசியல் பதற்றங்கள் நீடிப்பதால் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## உலகின் அணு ... தொடர்ச்சி...

தடுக்க ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே எந்த சட்ட ஆவணங்களும் இல்லை.

ரஷ்யாவின் அணுசக்தித் தடுப்பு கூறுகள் மீது உக்ரேனிய தாக்குதல்களை மேற்கோள் காட்டி, மேற்கு நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டி, மாஸ்கோ 2023 இல் ஒப்பந்தத்தின் சரிபார்ப்பு வழிமுறை களை நிறுத்தி வைத்தது.

இதற்கிடையில், புதிய START இன் தோல்வி உலகின் இரண்டு பெரிய அணுசக்தி வல்லரசுகளின்



# எப்ஸ்டீன் கோப்புகள் மற்றும் யாரும் கேட்க விரும்பாத புலனாய்வு கேள்வி

மொழியாக்கம்: **ஆர்த்திகன்**

## பகுதி 1

பிப்ரவரி 2, 2026 நிலவரப்படி, அமெரிக்க நீதித்துறை, ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான உள்ளடக்கத்தின் மிகப் பெரிய தொகுப்பை வெளியிட்டது, இதுவரை வெளியிடப் பட்டவற்றிலேயே மிகப்பெரியது இதுவாகும். மூன்று மில்லியனுக்கும் அதிகமான பக்கங்கள், இரண்டாயிரம் வீடியோக்கள் மற்றும் சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் படங்கள் இப்போது பொது களத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில், மில்லியன் கணக்கான பக்கங்கள் மறைக்கப்பட்டுள்ளன, திருத்தப்பட்டுள்ளன அல்லது தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன என்பதைத் நீதித்துறை வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறது.




இரண்டு அறிக்கைகளும் ஒரே நேரத்தில் உண்மையாக இருக்கலாம், ஆனால் அவை ஒன்றாக எந்தவொரு தனிப்பட்ட ஆவணத்தின் உள்ளடக்கங்களையும் விட மிகவும் வெளிப்படையான கேள்வியை எழுப்புகின்றன: பொது மக்கள் பார்க்க அனுமதிக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அரசால் ஏற்கனவே ஆராயப்பட்ட, மதிப்பிடப்பட்ட மற்றும் அமைதியாக உள்வாங்கப்பட்டவை என்ன?

இந்த பொருட்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட வில்லை. கூட்டாட்சி அதிகாரிகள் பல ஆண்டுகளாக எப்ஸ்டீன் தொடர்பான ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள், சில சந்தர்ப்பங்களில் பல தசாப்தங்களாக, முக்கிய சேகரிப்புகள் 2000களின் நடுப்பகுதியிலிருந்தும் எப்ஸ்டீனின் 2019 கைதுக்குப் பின்னரும் உள்ளன. ஒரு பக்கம் பொதுவில் வெளியிடப்படுவதற்கு முன்பு, முழு காப்பகமும் உள்நாட்டில் மதிப்பாய்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு மின்னஞ்சல், புகைப்படம், தொடர்பு பட்டியல் மற்றும் நிதி பதிவும் சட்ட, உளவுத்துறை மற்றும் நிறுவன ஆய்வுகளின் அடுக்குகள் வழியாக அனுப்பப்பட்டன.



பொதுமக்கள் காப்பகத்தைப் பெறவில்லை; அது சட்ட ஆபத்து, அரசியல் வெளிப்பாடு, இராஜதந்திர உணர்திறன் மற்றும் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் கட்டுப்பாடு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட விளைவைப் கொண்டது. அந்த வேறுபாடு முக்கியமானது, ஏனெனில் இது உண்மையான தகவல் நன்மையை குடிமக்களுடன் அல்ல, நிறுவனங்களுடன் உறுதியாக கொண்டுள்ளது.



தற்போது, எப்ஸ்டீன் அசாதாரண பாதுகாப்பால் பயனடைந்தார் என்று கூறுவது இனி சர்ச்சைக்குரியதாக இல்லை. பெயரிடப்படாத சக-சதிகாரர்களுக்கு வெளிப்படையாக பாதுகாப்பு வழங்கிய அவரது 2008 வழக்குத் தொடராத ஒப்பந்தம், ஒரு தொடர் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க சட்ட ஏற்பாடுகளில் ஒன்றாக உள்ளது. தண்டனை விதிக்கப்பட்ட பிறகும், எப்ஸ்டீன் உயரடுக்கு நெட்வொர்க்குகளுக்கான தொடர்பை தக்க வைத்துக் கொண்டார், சுதந்திரமாகப் பயணம் செய்தார், கணக்கில் வராத பெருமளவான செல்வத்தைப் பராமரித்தார் மற்றும் இறுதியில் சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணையை நிரந்தரமாக முன்கூட்டியே முடக்கிய சூழ்நிலைகளில் சிறையில் இறந்தார்.



இந்த முறை இந்த சம்பவம் தனிமைப்படுத்தப்பட்ட திறமையின்மை அல்லது சாதாரண ஊழலை ஒத்திருக்காது. இது கடுமையான சகிப்புத்தன்மையை ஒத்திருக்கிறது. அப்படியானால், யார் குற்றங்களைச் செய்தார்கள் என்பது மட்டுமல்ல, ஏன் பல நிறுவனங்கள் அந்தக் குற்றங்கள் மறைக்கப்படுவதை விரும்பவில்லை அல்லது என்பதுதான் கேள்வி.

இங்குதான் உளவுத்துறை தொடர்பான சந்தேகம் விவாதத்திற்குள் நுழைகிறது, அதை கவனமாக ஆய்வு செய்ய வேண்டும். ஜெஃப்ரி எப்ஸ்டீன் எந்தவொரு உளவுத் துறை சேவையின் முறையான முகவராக இருந்தார் என்பதற்கு பொது, ஆவண ஆதாரம் எதுவும் இல்லை. கிட்டத்தட்ட ஒருபோதும் இருக்காது. அந்த ஆதாரம்



இல்லாதது அசாதாரணமானது அல்ல; அது உளவுத்துறைப் பணியின் வடிவமைப்புக் கொள்கையாகும். எப்ஸ்டீன் ஒரு உளவுத்துறை நிறுவனத்தால் "நடத்தப்பட்டாரா" என்பது குறுகிய மற்றும் மிகவும் அறிவுபூர்வமான கேள்வி அல்ல, ஆனால் அவரது செயல்பாடு உளவுத்துறை நலன்களுடன், குறிப்பாக மொசாட் போன்ற வெளிநாட்டு சேவையின் நலன்களுடன் இணைந்த வகையில் செயல்பட்டதா என்பதுதான்.

மொசாட் இந்த விவாதத்தில் சித்தாந்தம் அல்லது பாரபட்சம் மூலம் அல்ல, ஆனால் கட்டமைப்பு மூலம் தொடர்பில் இருந்திருக்கலாம். எப்ஸ்டீனின் தொடர்புகளின் விவரம் உள்நாட்டுடன் முடிந்துபோவது அல்ல, உலகளாவியது. அவரது வட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதிகள் மற்றும் மூத்த அமைச்சரவை அதிகாரிகள், காங்கிரஸ் உறுப்பினர்கள், பிரிட்டிஷ் அரச குடும்பம், முக்கிய நிதியாளர்கள்,

தொடர்ச்சி: பக்கம் 15

## நிழலாடும் சுதந்திரமும் ... தொடர்ச்சி...

அளவிலேயே இருப்பதை உறுதிப்படுத்தியது.

ஜனாதிபதி தனது உரையில் 'நேர்மையானவர்கள் சட்டத்திற்கு அஞ்சத் தேவையில்லை' என்று குறிப்பிட்ட போதிலும், மட்டக்களப்பிலும் கிளிநொச்சியிலும் அமைதியான முறையில் போராடிய மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட முட்டுக்கட்டைகள் மற்றும் தள்ளுமுள்ளுகள் புதிய ஆட்சியிலும் அடக்குமுறை இயந்திரம் மாறவில்லை என்பதைக் காட்டுகிறது.

'கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் கூட இல்லாத நெருக்கடிகள் இன்றைய அநுர ஆட்சியிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளது' என்ற போராட்டக்காரர்களின் கருத்து, ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் தமிழ் மக்கள் மீதான அணு குமுறையில் பாரிய மாற்றம் ஏற்படவில்லை என்ற கவலையைத் தோற்றுவித்துள்ளது.

பொருளாதாரத் தரவுகள் சாதகமாக இருப்பதாகவும், அதன் பலன்கள் கிராமங்களுக்குச் சென்றடைய வேண் டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டாலும், வடக்கு-கிழக்கு மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாத வரை எந்தவொரு பொருளாதார வளர்ச்சியும் அவர்களுக்கு முழுமையான சுதந்திரத்தைத் தரப்போவதில்லை.

போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ள 'சர்வ தேச கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்பு' மற்றும் 'இடைக்கால நிர்வாகப் பொறிமுறை' போன்ற கோரிக்கைகள், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஜனநாயக வழிகளாகும்.

இவற்றைத் தவிர்த்துவிட்டு வெறும் 'பொருளாதாரச் சீர்திருத்தம்' பற்றி மட்டும் பேசுவது, காயங்களுக்கு மருந்து போடாமல் வலி நிவாரணி தருவதற்கு ஒப்பானதாக இருக்கின்றது, இதனையே கடந்த கால ஆட்சியாளர்களும் மேற்கொண்டனர்.

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம் மீண்டும் ஒருமுறை நாட்டை இருவேறு துருவங்களாகப் பிரித்துக் காட்டியுள்ளது. தென்னிலங்கை 'ஒற்றுமை' பற்றிப் பேசும் அதேவேளையில், வடக்கு-கிழக்கு 'நீதி' மற்றும் 'அரசியல் தன்னாட்சி' பற்றிப் பேசுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உரை யில் இனவாதத்திற்கு இடமில்லை என்ற முழக்கம் இருந்த போதிலும், தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகளை அவர் கையாளும் விதம் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.

'வெகுதூரம் பயணிக்க வேண்டுமானால் அனை வரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்' என்ற ஜனாதிபதியின் கூற்று உண்மையாக வேண்டுமானால், தமிழ் மக்களின் 10 அம்சப் பிரகடனத்தில் உள்ள நியாயங்களுக்கு செவிசாய்த்து, சர்வதேசத்தின் மேற்பார்வையில் உண்மையான நீதியை நிலைநாட்ட வேண்டும். அதுவரை, இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு 'கரிநாளாகவே' நீளும்.

• • •

## 1750: பெருந்தோட்ட ... தொடர்ச்சி...

அரசாங்கம் வேதனம் வழங்குவது என்பது நிரந்தரத் தீர்வாகாது. அரசாங்கம் ஒரு கட்டத்தில் இந்த உதவியை நிறுத்தினால், கம்பனிகள் அந்த 200 ரூபாயையும் பொறுப் பேற்குமா? அல்லது தொழிலாளர்களின் சம்பளம் மீண்டும் குறையுமா? என்ற அச்சம் நிலவுகிறது.

அரச செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான கோரிக் கையாகும். இவ்வாறான விசேட கொடுப்பனவுகள் 'சலுகை கள்' எனக் கருதப்பட்டு, வருங்காலத்தில் நிறுத்தப்பட வேண் டும் என்ற அழுத்தம் சர்வதேச ரீதியாக ஏற்படலாம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,750 ரூபாய் வேதனம் உயர்வு என்பது ஒரு குறுகிய கால வெற்றியாகக் கருதப்படலாம். இது தொழிலாளர்களுக்கு உடனடி நிம் மதியைத் தந்தாலும், அதன் நீண்டகாலப் பயன் என்பது அரசாங்கத்தின் பொருளாதார நிலைத்தன்மையிலேயே தங்கியுள்ளது.

அரசாங்கம் தனது வரிப்பணத்திலிருந்து வேதனம் வழங்குவதை விட, பெருந்தோட்டக் கம்பனிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்து, அதன் மூலம் ஒரு கௌரவமான 'வாழ்க்கைச் சம்பளத்தை' கம்பனிகளே வழங்கும் நிலையை உருவாக்குவதே உண்மையான தீர்வாகும். இலங்கை அரசாங்கம் தற்போதைய நெருக்கடியைக் கடந்து செல்லும் வரை இந்த நிதியை வழங்கலாம்.

ஆனால், நீண்டகால அடிப்படையில் பெருந்தோட் டத் துறையில் காணி உரிமம், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் நவீன விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமே மலையக மக்களின் பொருளாதார விடுதலையை உறுதி செய்ய முடியும்.







## ஈழத்தமிழரின் அரசியல் ... தொடர்ச்சி...

ஆகியோர் ஒரு ஆவணத்தை வெளியிட்டனர்.

அதில்....

**அ) தற்போதைய அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் எமக்கு தந்த படிப்பினையின் அடிப்படையிலும், இலங்கை அரசியலின் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் கலாசாரத்தில் தமிழர்களின் கடந்த 68 ஆண்டு கால கூட்டனுபவத்தின் பிரகாரமும் ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எந்த வடிவத்திலும் சாத்தியம் இல்லை என நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.**

**ஆ) தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டத்தின் அடிப்படையில், தேசிய இனப்பிரச்சி னைக்கான நடைமுறை சாத்தியமான தீர்வு, தமிழர் களை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஒரு தேசமாக, அவர்களது சுயநிர்ணய உரிமையை மதிக்கும், தன்னளவில் இறைமை கொண்ட சுயாட்சி ஒன்றை நிறுவும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமாகவே அடையப்படும் எனக் கூறுகின்றோம்.**

**இ) தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த் தேசத்தின் இறைமையையும், நிறுவன ரீதியாக, சமஷ்டி முறைமை ஒன்றின் மூலமாக அடைந்து கொள் ளலாம் என நாம் கூறுகின்றோம்.**

**ஈ) தமிழர் தேசத்தின் தனித்துவத்தையோ, தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ அங்கீகரிக்காத, உள்ளடக்கத்தில் தெளிவில்லாத அரை குறை தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள முடியாது என இப்பேரணி கூறுகின்றது.**

**உ) புதிய அரசியலமைப்பு மிகவும் இரகசியமான முறையில் உருவாக்கப்படுகின்றது. புதிய அரசியலமை ப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட பொது மக்கள் கலந் தாய்வு தொடர்பிலான அறிக்கை தமிழ் மக்களின் முன் வைப்புக்களை புறந்தள்ளியே சமரப்பிக்கப்பட்டுள் ளது. உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பு நகல் தொடர்பிலான மக்கள் வாக்கெடுப்பிற்கு முன்னர் வெளிப்படையானதும், சனநாயக ரீதியில் கலந்துரை யாடல் ஒன்று மக்கள் மத்தியில் இடம் பெற போது மான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அடக்கு முறையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பிலான கலந்து ரையாடலை நடாத்த முடியாது. வடக்கு கிழக்கில் கருத்துக் சுதந்திரத்துடன் புதிய அரசியலமைப்பு தொடர்பிலான திறந்த விவாதம் நடைபெற பயங்கரவாதத் தடை சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இராணுவமயநீக்கம் செய்யப்பட வேண்டும் என நாம் கூறுகின்றோம் என குறிப்பிடப்பட்டது. அதுவும் நடக்கவில்லை.**

2019 அக்டோபர் 15ல் தமிழரசுக் கட்சி, புளொட், ஈபிஆர்எல்எப், ரெலோ ஆகிய கட்சிகள் தமது கருத்துக்களை அறிக்கைகளாகச் சமர்ப்பித்திருந்தார்கள். அவையெல்லாம் சேர்க்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அனைத் தும் ஒரு பொது ஆவணமாக தயாரிக்கப்பட்டது. அந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பல விடயங்களை ஏற்றுக்கொண்டது.

சில விடயங்களில் மாத்திரமே கலந்துரையாடப் பட்டது. அதுவே ஆவணமாகவும் தயாரிக்கப்பட்டது. ஆனா லும் புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு தொடர்பாக அவர்கள் தொடர்ந்து பேசினார்கள். எனினும் இந்த விடயங்கள் தற்போதைக்குத் தேவையில்லை. நாங்கள் பேசுகின்ற விடயங்கள் வேறு. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் கூறப்பட்டது அத்துடன் இடைக்கால வரைபு தற்போது பேசப்படுவதில்லை, கைவிடப்பட்டுள்ளது என்றெல்லாம் ஏனைய கட்சிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் புதிய வரைபை நிராகரிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்கள். அப்படி இல்லையேல் இந்த ஆவணத்தில் கையொப்பமிட முடியாது என்றும் கூறிவிட்டு தாமாகவே வெளியேறினார்கள்.

இப்படியாக இணைந்த வடகிழக்கில் நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும், விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்பு இருந்த 2009 மே 18 க்கு முன்னரும் சுனாமி கட்டமைப்பு ஆவணம் தயாரிக்கப்பட்டது அதுவும் இலங்கை அரசு ஏற்கவில்லை.

இப்படியான பல ஆவணங்கள் தமிழ் தலைவர் களால் காலத்துக்காலம் தயாரிக்கப்பட்ட வரலாறுகள் உண்டு எந்த ஆவணங்களையும் இனவாத இலங்கை அரசுகள் கணக்கெடுக்கவில்லை.

இப்போது தமிழரசுகட்சி, சங்கு கூட்டணி தயாரிக்கும் ஆவணங்களால் எதுவும் நடக்காது. மக்களை தேசமாக திரட்டாமல் எதையுமே எந்த தமிழ்த்தேசிய கட்சிகளாலும் சாதிக்கமுடியாது. தேர்தல் கூட்டும், பதவி போட்டியும், கதிரை ஆசைகளால் இயங்கும் தமிழ்தேசிய கட்சிகளால் எந்த பிரயோசனங்களும் ஏற்படாது.

• • •

## எப்ஸ்டீன் கோப்புகள் ... தொடர்ச்சி...

தொழில்நுட்ப நிர்வாகிகள், ஊடக உரிமையாளர்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் அடங்குவர்.

அந்த இலக்குகளின் தொகுப்பு ஒரு வெளிநாட்டு உளவுத்துறை சேவைக்கு தனித்துவமான மதிப்புமிக்கது. உள்நாட்டு நிறுவனங்கள் ஏற்கனவே தங்கள் சொந்த அரசியல் வர்க்கத்தை விட சட்ட மற்றும் கட்டாய விதிமுறைகளை கொண்டுள்ளன; ஒரு வெளிநாட்டு சேவையில் அவை இல்லை. ஒரு வெளிநாட்டு சேவையைப் பொறுத்தவரை, கொம்ப்ரோமாட் வழக்குத் தொடுத்தல் அல்லது ஊழல் பற்றியது அல்ல, மாறாக அந்நியச் செலாவணி, காப்பீடு மற்றும் நீண்டகால செல்வாக்கு பற்றியது.

இஸ்ரேலின் உளவுத்துறை கோட்பாடு என்பது வரலாற்று ரீதியாக நிரந்தர மூலோபாய பாதிப்புமிக்கது, ஒரு சிறிய மக்கள் தொகை மற்றும் விரோதமான பிராந்திய சூழல் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது மனித நுண்ணறிவு, தொடர்பாடல் மற்றும் முன்கூட்டியே செயற்பாடு ஆகியவற்றில் நிலையான முக்கியத்துவத்தை உருவாக்குகிறது. இது ஒரு தார்மீக கூற்று அல்ல. இது ஒரு மூலோபாயமாகும்.

இந்த கருதுகோளின் அடிப்படையில் எந்தவொரு தீவிர ஆய்வும் தவிர்க்க முடியாமல் கிஸ்லைன் மேக்ஸ்வெல் பக்கம் திரும்புகிறது. அவர் ஒரு புற நபராக இல்லை, ஆனால் எப்ஸ்டீனின் உலக உளவுத்துறை உளவுத்துறையின் அமைப்பாளர், நடவடிக்கைகளை மேற்கொள்பவர் மற்றும் தொடர்ந்த செயற்பாட்டாளராக இருந்தார். அவரது தந்தை ராபர்ட் மேக்ஸ்வெல், மர்மமான சூழ்நிலையில் இறந்த ஒரு ஊடகப் பிரபு மட்டுமல்ல; அவர் இஸ்ரேலுடனான உறவுகளை காத்திரமாக கொண்டிருந்தவர், மற்றும் அவரது மரணத்திற்குப் பிறகு இஸ்ரேலிய அதிகாரிகளிடமிருந்து பொது பாராட்டுகளைப் பெற்றவர், அதில் மூத்த நபர்கள் கலந்து கொண்ட நாடுகள் அளவிலான இறுதிச் சடங்கு அடங்கும்.

இது பணி அல்லது நேரடி செயல்பாட்டு தொடர்ச்சியின் மரபுரிமையை நிரூபிக்கவில்லை, ஆனால் கிஸ்லைன் மேக்ஸ்வெல் உளவுத்துறைக்கு அருகிலுள்ள நெட்வொர்க்குகளுக்குள் வளர்ந்தார், பெரும்பாலான சமூகவாதிகள் இல்லாத வகையில் அதிகாரம், ரகசியம் மற்றும் செல்வாக்கை நன்கு அறிந்திருந்தார் என்பதை இது நிறுவுகிறது. எப்ஸ்டீன் உள்கட்டமைப்பாக செயல்பட்டால், மேக்ஸ்வெல் அந்த உள்கட்டமைப்பை நீடித்ததாக மாற்றிய செயல்பாட்டு அடுக்குக்கு மிக நெருக்கமாகத் இருக்கின்றார். ஆளுமைகள் அகற்றப்பட்டு, கட்டமைப்பு அதன் சொந்த விதிமுறைகளில் ஆராயப்படும்போது, செயல்பாடு தற் செயலாகத் தெரியவில்லை. வழக்கமான அதிகார வரம்பிற்கு வெளியே ஒரு தனியார் தீவு, வெளிநாட்டினரின் தொடர்ச்சி யான நடமாட்டம், வரையறுக்கப்பட்ட பாதுகாப்புடன் பாதிக்கப்பட க்கூடிய பாதிக்கப்பட்ட இளம் பெண்கள், மறைக்கப்பட்ட பதிவு திறன், நிதி ஒளிபுகாநிலை மற்றும் அர்த்தமுள்ள இடையூறு இல்லாமல் நீண்ட செயல்பாட்டு ஆயுட்காலம் ஆகியவை ஒரு உன்னதமான கொம்ப்ரோமேட் (Kompromat) சேகரிப்பு தளத்தை ஒத்திருக்கின்றன.

மிக முக்கியமாக, எப்ஸ்டீன் மிரட்டல் விடுத்து பணம் சம்பாதிக்க முயற்சிக்கும் ஒரு மனிதனைப் போல நடந்து கொள்ளவில்லை. அவர் தகவல்களை வெளியிடவில்லை, வெளிப்படையான அச்சுறுத்தல்களை வெளியிடவில்லை அல்லது அதிக பணத்தை சம்பாதிப்பதற்காக வெளிப் படையாகப் பணத்தை வெளியிடவில்லை. தொடர்ந்து, ஆண்டுதோறும், மறைவாகவாழும் மற்றும் இனங்காணப்ப டாத. குற்றவாளிகள் லாபத்தை அதிகரிப்பது அப்படியல்ல. உளவுத்துறை தனது செயற்பாட்டை அதிகரிப்பது இப் படித்தான்.

இதனால்தான் ஒரு புலனாய்வுத்துறையின் உரிமை என்ற கருத்து தவறாக வழிநடத்துகிறது. எப்ஸ்டீன் போன்ற ஒருவரை எந்த உளவுத்துறை சேவையும் முறையாக சொந்தமாக்கிக் கொள்ளாது. புலனாய்வுத்துறையின் செயற்பாட்டில் காகிதப்பணிகள் இருக்காது, பணி குறிப்பு கள் இருக்காது, கட்டளைச் சங்கிலி இருக்காது. மிகவும் நம்பத்தகுந்த மாதிரி விழிப்புணர்வு, வசதி மற்றும் தேர்ந் தெடுக்கப்பட்ட பாதுகாப்பு, பயனுள்ளதாக இருக்கும் போது தகவல்கள் பிரித்தெடுக்கப்படும், தேவைப்படும்போது தூரம் பராமரிக்கப்படும்.

உளவுத்துறை அடிப்படையில், எப்ஸ்டீன் ஒரு முழு அளவிலான முகவராக இருக்க மாட்டார். கொம் ப்ரோமேட் அளவில் இருப்பதால், அதிகாரம் அதைச் சுற்றி சுயமாக ஒழுங்கமைக்கத் தொடங்குகிறது. பல நாடு கள் வெளிப்படையான ஒருங்கிணைப்பு இல்லாமல் அமைதி யாக அதில் இணைந்து பயனடையலாம் மற்றும் அமைப்பு சுய-பாதுகாப்பாக மாறும்.

ஒரு கருத்தியல் லென்ஸை விட நிதி சேகரிப்பு லென்ஸ் மூலம் பார்க்கும்போது, சில கொள்கை மற்றும் நிறுவன நடத்தைகள் தற்செயலானதாகவும், மிகவும் வடிவமைக்கப்பட்டதாகவும் தோன்றத் தொடங்குகின்றன. பயனுள்ள பணப் புழக்கங்கள் வியத்தகு தலைகீழ் மாற்றங்களையோ அல்லது புலப்படும் கீழ்ப்படிதலையோ உருவாக்காது. இது கட்டுப்பாடு, தயக்கம் மற்றும் மௌனத்தை உருவாக்குகிறது, பின்பற்றப்படாததை இருப்பதைப் போலவே வடிவமைக்கிறது.

தொடரும்.........

**நன்றி: எக்ஸ் சமூக வலைத்தளம்.**

## சுதந்திர தினமா? ... தொடர்ச்சி...

வடகிழக்கில் இன்று முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டமிட்ட செயற்பாடுகளை யாரும் இலகுவில் கடந்துவிட முடியாது.கடந்த ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவந்த ஆக்கிர மிப்பு செயற்பாடுகளை இன்றைய ஆட்சியாளர்களும் முன்னெடுத்துச்செல்லும் நிலைமையே காணப்படுகின்றது. அதற்காகவே தமிழர்களின் குரல்களை அடக்குவதற்கான செயற்பாடுகள் வடகிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன.

"எங்களது உரிமை இன்று மறுக்கப்பட்டு இருக் கிறது.கடந்த காலங்களில் கோத்தபாய அரசாங்கம் இருக் கின்ற போதும் கூட இந்த சுதந்திர தினத்தை கரிநாளாக செய்து வருகின்றோம். ஆனால் இன்றைய அரசு மக்களுக் கான தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது என்று சொல்லிக்கொண்டு இன்று வீதியில் நடக்கின்ற நடமாடும் உரிமையைக் கூட இந்த சுதந்திர நாளில் எமக்கு மறுக்கப் பட்டிருக்கின்றது" என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

"நமது நிலங்களை அபகரிக்கின்றார்கள், புத்தரை வைத்து இடங்களை அபகரிக்கின்றார்கள். இதனைப் பார்த்தால் நமக்கு வேதனையாக இருக்கின்றது. அதாவது மத சின்னத்தை வைத்துக்கொண்டு தமிழர்களுடைய இடங்களில் அவர்களது இன பரம்பலை செய்து கொண்டி ருக்கின்றார்கள். எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதனை கேட்க வேண்டும். எங்களது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை இந்த அரசாங்கம் கூற வேண்டும். அதனை சொல்வதற்கு தயார் இல்லை இந்த வீதி யாருக்கு சொந்தம் இந்த மண் யாருக்கு சொந்தம் தமிழர்கள் வாழுகின்ற இடத்தில் வந்து தமிழர்களை அடக்குகின்றார்கள் என்றால் இதுதானா சுதந்திர தினம் என தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமைகள் என்பது வடகிழக்கில் மீண்டும் ஒரு அடக்குமுறைக்கு இந்த அரசாங்கம் தயாராகி வருவதை வெளிப்படுத்துகின்றது.அண்மைக்கால செயற் பாடுகள் இந்த அரசாங்கத்தின் முகத்திரைகளை கிழிக் கும் வகையில் இருப்பதை இன்று உணரமுடிகின்றது.எதிர் காலத்தில் எமது ஒன்றுபட்ட அரசியல் பலமும்,சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றுபட்ட செயற்பாடுகளுமே எமது நிலத்தினையும் எமது உரிமையினையும் தக்கவைப்பதற் கான அடித்தளங்களை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் உணர்ந்துசெயற்படவேண்டும்.

• • •

## உலக மக்கள் தொகையில் ... தொடர்ச்சி...

தொகை படிப்படியாக வளர்ந்து ஆபிரிக்கா 2100 ஆம் ஆண்டுக்குள் 4 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. மனித வரலாற்றில் இதற்கு முன்பு இது போன்ற எதுவும் நடந்ததில்லை. அதே காலகட்டத்தில், சீனாவின் மக்கள் தொகை பாதிக்கும் மேல் சுருங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தியா, சீனாவின் மக்கள் தொகையில் 2 மடங்கு மக்கள் தொகையை கொண்டதாக இருக்கும்.

2100 ஆம் ஆண்டு உலகம் மிகவும் வித்தியாசமாக இருக்கும், ஆபிரிக்காவும் ஆசியாவும் 8 பில்லியன் மக்களைக் கொண்டிருக்கும், மற்ற அனைத்து நாடுகளும் சேர்ந்து சிறுபான்மையினரை உருவாக்கும். உலகின் ஈர்ப்பு மையம் அமைதியாக ஆனால் தீர்க்கமாக மாறி வருகிறது.

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க போன்ற நாடுகளில் மக்கள் தொகை வெகுவாக குறைந்து வருகின்றன. தென்கொரியா, யப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளிலும் அவ்வாறே உள்ளன. இது தொடர்பில் பல நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் உலகில் மாறிவரும் வாழ்க்கை முறைகள் அதில் கடும் தாக்கத்தை செலுத்துகின்றன.









இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





